புதினப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது  உ  விரோதிஞூ (1889) ஆவணிமீ உகூ ஆரம்பமானது

பத்திரக்கிரயம்.
வருஷம் ஒன்றுக்கு:
யாழ்ப்பாணப் பட்டினம் ரூ 5-00
இலங்கை தமிழ் 9-00
இலங்கை இந்தியா ரூ 8-00
இந்தியா தமிழ் 12-00
சோனிவாய்ப்பகுதி ரூ 9-00
இங்கிலாந்து தமிழ் 13-00
முற்பண மனுப்பிறலன்றிக் கவனிக்கப்படா.

# இந்துசாதனம்.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க அனைத்தானும், ஆன்ற பெருமை தரும்".

விளம்பரவிகிதம்.
முன்முறைக்கு:
ஒரு கலம் ரூபா 10-00
அரைக்கலம் „ 5-50
கால்கலம் „ 4-00
அந்தந்த முறைகட்கு கேற்படி விகிதக்கழிவு.
☞ விளம்பரங்கள் முற்பண மனுப்பிறலன்றிக் கவனிக்கப்படா.

"சீர்பூத்த கருவிரு ணர்ச்சி தேங்கச் செம்பூத்த சிமாக மங்களோங்கப், பார்பூத்த புறச்சமய விருள்களிங்கப் பரம்பூத்த சைவநெறிபாரோர் தாங்கப்,
பேர்பூத்த சிவானந்த விளித நூங்கப் பிறைபூத்த சடைமவுலிப் பிரானு தந்த, வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது மதம்பூத்த விநாயகன்றான் வணங்கி வாழ்வாம்"

"வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல்லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

புத்தகம்—சநு } யாழ்ப்பாணம்:— ஸ்ரீமுகஞூ மாசிமீ சஉ; (1934 பிப்ரவரி 15) வியாழக்கிழமை. { இலக்கம்—அச



## கந்தரலங்காரம்.

கிளைத்துப் புறப்பட்ட சூர்மார் புடன்கிரி யூடுருவத்
துளைத்துப் புறப்பட்ட வேற்கந்த னேதுறந் தோருளத்தை
வளைத்துப் பிடித்துப் பதைக்கப் பதைக்க வதைக்துங்கண் ணார்க்
கிளைத்துத் தவிக்கின்ற வென்னை யெந்நாள்வந் திரட்சிப்பையே.

இ ள்: கிளைத்துப் புறப்பட்ட சூர்மார்புடன்—(அசுரசுற்றம் வலிமை அதிகாரம் வரப்பிரசாதம் முதலியவற்ருல்) பெருகி யுத்தத்திற்கு முற்பட்ட சூரபன்மனது மார்போடு; கிரி ஊடுருவத் துளைத்துப் புறப்பட்ட வேற்கந்தனே-கிரௌஞ்சமலையும் ஊடுருவும்படி துளைத்து அப்பாற் சென்றதாகிய வேற்படையை உடைய கந்தசுவாமியே; துறந்தார் உளத்தை வளைத்துப் பிடித்து-துறவிகளுடைய மனத்தையும் வசைத்துத் தம்பாற் கவர்ந்து; பதைக்கப் பதைக்க வதைக்குங் கண்ணார்க்கு-பெரிதும் பதைக்கும்படி கொல்லுகின்ற நோக்கினையுடைய பெண்களுக்கு; இளைத்துத் தவிக்கின்ற என்னை-ஆற்றாது மனமுடைந்து தயங்குகின்ற தமியேனை; எந்நாள் வந்து இரட்சிப்பை-எந்த நாளில் வந்து காத்தருளுவீரோ (அறியேன்) எ-று.

கிளைத்து என்பதற்கு மாமரமாகக் கிளைத்து எனப் பொருள் கொள்ளினுமாம். கிரியூடுருவ, துறந்தோருளத்தில் என்பவற்றில் உயர்வு சிறப்பும்மைகள் தொக்கன. துறந்தோருளத்தை ..........வதைக்குங் கண்ணார்.........." என்றமையிஞல் துறவிகளெல்லாருளத்தை வதைத்தல் இலகுவென்பது சொல்லாமலே அமையும். இம்மகளிர் தம் கண்களாற் பிரபஞ்சப் பற்றுடையார் உள்ளத்தை வதைத்தல் போல் அத்துணை இலகுவாகத் துறவிகளை மருட்டுதல் முடியாது காலைநியில்மருட்டுதல் வேண்டுமென்பார் "வளைத்துப் பிடித்து" என்ருர். வளைத்தலும், பிடித்தலும், இலக்கணைகள். வளைத்தல் இங்கே தொன்மைநிலையைக் கெடுத்தல். மடமாஞர் விழிகள் ஆடவருளத்தை வருத்து மியல்பின வென்பதை "கண்டாருயிருண்ணுந் தோற்றந்தாற் பெண்டகைப்—பேதைக்கமர்ந்தன கண்" என வருந் திருக்குறளானுணர்க. "எந்நாள் வந்திரட்சிப்பை" இரட்சிப்பையோ அல்லையோ என்னும் ஐயப்பாட்டைத் தந்து நின்றது. பதைக்கப் பதைக்க என்னும் அடுக்கு மிகுதியைக் காட்டி நின்றது. ஏ ஈற்றசை. இது பெண்ணாசையைக் கெடுத்துத் தம்மை ஆட்கொண்டருள வேண்டுமெனக் கந்தவேளை இரந்தவாறும்,

சூரபன்மனையும் கிரௌஞ்ச மலையையும் வேற்படையால் அழித்த கந்தவேளே தமியேனைப் பெண்ணாசையினின்றும் நீக்கி ஆட்கொண்டருள வேண்டு மென்றபடி.

### மற்றிக்குலேஷன்பரீட்சைக்கு 23000 பேர்!

கல்கத்தாச் சர்வ கலா சங்கத்தாரால் சமீபகாலத்தில் நடத்தப்படவிருக்கும் மற்றிக்குலேஷன் பரீட்சைக்கு 23000 பேர் மனுச்செய்திருக்கின்றனர் என்றும் அவர்களில் 1000 பேர்வரை பெண்களென்றும் அறிகிறேம். கல்கத்தாச் சர்வகலா சங்கத்திற்குமாத்திரம் இவ்வளவு பேரென்ருல், சென்னை, பம்பாய், பஞ்சாப், அலகபாத் முதலாம் சர்வகலா சங்கங்களுக்கு எவ்வளவுபேர் என்பதை மதிப்பிடவும் வேண்டுமா?

### 27தரம் குற்றஞ்சாட்டப்பட்ட மோட்டர்ச் சாரதி.

டெஹிவலையிலுள்ள மோட்டர்ப் பஸ் சாரதியான கே. எஸ். ஏ. சார்ல்ஸ் அப்புஹாமி என்பவன் தனது பஸ்வண்டியை மணித்தியாலத்துக்கு 25 மைல் வீதமாக ஓட்டினுன் என்று சென்ற செவ்வாய்க்கிழமை கோசங்க நீதிஸ்தலத்திற் குற்றஞ்சாட்டப்பட்டான். இவன் இதற்குமுன்னரும் இப்படியான குற்றங்களுக்காக 27 முறை தண்டனை பெற்றவனுகும். நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு 50 ரூபா அபராதம் விதித்தார் அத்துடன், அவன் ஒருவருஷகாலத்திற்கு மோட்டர் ரதம் செலுத்தவொண்ணுதென உத்தரவிட்டார்.

### 17பேரை மேலதிகமாக ஏற்றினுன்

தனது மோட்டர் பஸ்ஸில் பிரமாணத்திற்கு மேற்பட 17 பேரை ஏற்றினுனென்று கேடியான் என்னும் பஸ் கண்டக்ரர் ஒருவன் மாத்தறை பொலிஸ் நீதிஸ்தலத்திற்குற்றஞ்சாட்டப்பட்டான். நீதிபதி அவனைக் குற்றவாளியெனக் கண்டு 85 ரூபா அபராதம் விதித்தார்.

### தம்பியின் காதைக்கடித்த ஆறுமுகம்.

அரிசாவலையில் தரும்பிற்றியாத்தோட்டத்தில் வேலை செய்யும் ஆறுமுகம் என்பவன், தனது தம்பியாகும் மொட்டையர் என்பவனின் காதைக் கடித்து அபாயகரமான காயம் விளைத்தான் என்று நேற்று வந்த செய்தி ஒன்று கூறுகிறது:

சென்ற சனிக்கிழமை ஆறுமுகம் தன் வீடுநிக்கு வந்தபோது மொட்டையர் வேலைக்குப் போகாது சோம்பேறியாயிருந்ததைக்கண்டு வேலைக்குப் போகும்படி கண்டித்தான். இவனுடைய கண்டிப்பு மொட்டையருக்குப் பிடிக்கவில்லை. அவனெதிர் வார்த்தை பேசவே, இருவருக்கும் கைகலந்த சண்டை நடந்தது. மொட்டையர் ஆறுமுகத்தின் தலைமயிரை பற்றியிழுக்க, அதினின்றும் விடுவிப்பதற்காக ஆறுமுகம் மொட்டையரின் கைவிரல்களையும் காதையும் கடித்தானும். இப்போது ஆறுமுகம் சிறைப்பட்டிருக்கிருன்.

## நிச்சயமாய் விட்டது.

———(*)———

### வடமாகாணமும் அரசாங்க சபைத் தெரிவும்

———:o:———

### குடியேற்றநாட்டு மந்திரியின் வியாக்கியானம்.

சென்ற செவ்வாய்க்கிழமை கூடிய அரசாங்கசபைக் கூட்டத்தில் அரசாங்க சபைத்தலைவர், யாழ்ப்பாணத்தவர் அரசாங்கசபைக்குத் தம் பிரதிநிதிகளை அனுப்புதற்கான பிரேரணைத் தினத்தைப்பற்றிக் குடியேற்ற நாட்டு மந்திரி அனுப்பிய செய்தியை வாசித்துக்காட்டினுர்.

குடியேற்ற நாட்டு மந்திரியின் அறிக்கையின் சாரம் வருமாறு—

"சில காரணங்களின் பொருட்டு அரசாங்கசபையைப் புறக்கணித்த யாழ்ப்பாணம் தனது பிரதிநிதிகளை இனி அனுப்புவதற்காக அரசாங்க சபைச் சட்டம் இப்போது மாற்றி மன்னர் பிரான் சம்மதத்திற்கு விடப் பட்டிருக்கிறது. அரசாங்க சபைச் சட்டத்தின் மாற்றத்திஞல் தேசாதிபதி இனியோர் பிரேரணைத் தினத்தைத் தலைவர் நியமிக்கலாம்.

நாம் இத்தீர்மானத்திற்கு வந்ததன் காரணம், காலத்தோறும் பலர் எமக்கு மனுச் செய்தமையே எனக. அவர்கள் செய்த மனுக்களில் இருந்து யாழ்ப்பாணத்தவரிற் பெரும்பாலார் அரசாங்க சபைக்குத் தம்பிரதிநிதிகளை அனுப்ப வேண்டுமென அவாக் கொண்டிருக்கின்றனர் என்று தெரிகிறது. அவர்களின் அவாவைப் பூர்த்தி செய்வதற்காக அரசாங்கசபைச் சட்டம் மாற்றப்பட்டிருக்கிறது."

யாழ்ப்பாணத்தவரின் உண்மைத் தலைவர்களில் எவர் அரசாங்க சபைக்குட் புக வேண்டுமென்று குடியேற்ற நாட்டு மந்திரியை வேண்டிக்கொண்டனர் என்று நாம கேட்கிறேம். பதவி வேட்டுவரான சில பச்சோந்திகளையா குடியேற்ற நாட்டு மந்திரி தலைவர்கள் என எண்ணி வாயாடுகின்ருர்?

### புத்தி வந்துவிட்டது!

இராசப்பிரதிநிதியால் ஆரம்பிக்கப்பட்ட பூகம்பச் சேத சகாய நிதிக்கு மாத்திரம் தபாற்கந்தோர்கள் சகாயஞ் செய்ய வேண்டுமென முன்னர் அரசினர் அறிவித்திருந்தனர். பாபு இராஜேந்திரப் பிரசாத் அவர்களுக்கு அனுப்பப்படும் பணத்திற்கும் கட்டணம் அறவிடப்படமாட்டாதென்று இப்போது இந்திய அரசினர் ஓர் அறிக்கை விடுத்திருக்கின்றனர்.

### இப்படிச்செய்தால் என்ன?

சர்வகலா சங்கத்துப் பட்டதாரிகள் பலர் வேலையில்லாத் திண்டாட்டத்தால் வருந்துவதை இனியேனும் ஒழிப்பதற்கான வழியொன்றை சத்தரி கலாப் அவர்கள் சென்றவாரம் அலிகார் என்னுமிடத்திற் கூறினுர். ஆசிரியர்களைக் கொண்ட ஆலோசனைச் சபையொன்று ஒவ்வொரு கல்லூரியிலும் இருக்கவேண்டும்; மாணவர் மற்றிக்குலேஷன் பரீட்சையிற் சித்தியெய்தியவுடன், மேற்படிப்புக்குப் போவதோ, நிறுத்துவதோ என்று அவர்களுக்கு இந்தச்சபை ஆலோசனை கூறும். அப்படிச் செய்தால், பட்டதாரிகளுக்கிடையிலவேலையில்லாத் திண்டாட்டம் ஒழியக்கூடுமென்று சத்தரி கலாப் கூறினுர்.

## இந்தியச் செய்திகள்.

### சாதிக்கட்டுப்பாடு வேண்டாமாம்!

ஹிந்துக்களில் பிரம, க்ஷத்திரிய, வைசிய சூத்திர என்று சொல்லப்படும் வருணங்களை ஒழித்து, எல்லோரையும் பிராமணர் என்றே அழைக்கவேண்டும் என பம்பாய் பிரதிநிதியாக இந்திய மத்திய சட்டசபையில் உள்ள ஸ்ரீ. பீ. வீ. யாதவ அவர்கள் ஒரு சட்டத்தைப் பிரேரிக்கப்போகிருராம். வருணங்கள் இருக்கவேண்டும்; தீண்டாமையே ஒழிய வேண்டும் என்பது மகாத்மாகாந்தியடிகள் முதலிய பெரியோரது கொள்கையாகும் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது

### இன்னொரு இந்தியத் தேசாதிபதி.

பாஞ்சால மாகாணத்துத் தேசாதிபதியான சேர் ஹெர்பர்ட் எமர்ஸன் என்பவர் 4 மாத லீவில் இங்கிலாந்து செல்வார் என்றும் அவரிடத்திற்காக சேர் சிக்கந்தர் ஹயத்கான் என்னும் முஸ்லிம் கடமை பார்ப்பார் என்றும் அறிகிறேம். சேர் சிக்கந்தர் ஹயத்கான் பரந்த நோக்கங்கொண்டு சர்வசமய சமரசம் பாராட்டும் மேதாவியாவர்; அவர் வகுப்பு வாதத்திற்கு மாறுனவர் என்பதும் இங்கே குறிப்பிட வேண்டியதாகும்.

### மகாத்மாவின் திக்கு விஜயம்.

சென்றவாரம் அடிகளும் அவரது சகாக்களும் பழனிஸ்தலத்துக்குச் சென்றனர். முருகப்பெருமான் கோயில் கொண்டருளியிருக்கும் மலைக் கருகாமையில் உள்ள பந்தலில் பல்லாயிரக் கணக்கான மக்கள் சமூகத்தில் அடிகள் தீண்டாமை யொழிப்புச் சம்பந்தமாக பிரசாரணம் செய்தார். "நீங்கள் இறைவன் சந்நிதிக்குச் சமீபமாக நிற்கின்றீர்கள்; அந்தப் பரம் பொருள் முன்னிலையில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பேதத்தை ஒழியுங்கள்: நாங்கள் எல்லோரும் அந்தப் பரம பிதாவின் சேயராவோம். எனவே, எம் சகோதரனுகிய ஒருவனை நாம் தீண்டவொண்ணுது என்பது எந்த நியாயம் பற்றி? இந்தப் பழனிக்ஷேத்திரத்தில் ஹரிஜனங்களை உள்ளேவிடுவதில்லையாம். அஃதேனே? அப்படி அவர்களை, தம் சேயர்களாகிய ஹரிஜனங்களை, உள்ளே விடவேண்டாம் என்று முருகப்பெருமான் உங்களிடம் கூறினுரா? தன் சேயன் ஒருவன் தடுக்கப்படும் கோவிலில் உண்மையாகவே பரமேஸ்வரன் எழுந்தருள மாட்டான் என்பதே எனது திடமான நம்பிக்கையாகும். பரம தயாளுவாகிய அவர் எப்படிப் பட்சபாதமாய் நடப்பார்?" என்று அடிகள் அங்கு குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக் கெடுத்துரைத்தார்.

### இன்னும் ஒழியவில்லையா?

கல்கத்தாவைச்சேர்ந்த சிட்டகாங் நகர ஜெல்லாக்குள் புரட்சிக் கட்சியினரின் பயங்கர இயக்கம் வலுவடைந்து வருவதால், இப்போதுள்ள தண்டப் பொலிசருடன் இன்னும் ஓர் தொகை பொலிசார் நிறுவப்படுவர் என்று சென்றவாரக் கடைசியில் வெளிவந்த இந்திய அரசினர் சஞ்சிகைப் பத்திரிகை கூறுகிறது. இப்போது 5 வருஷ காலமாகப் புரட்சிக் கட்சியினரை அடக்கிவிட்டோம், அடக்கிவிட்டோம் என்று இராசப்பிரதிநிதி இந்தியச் சட்டசபையிலும், இந்தியா மந்திரி பார்லிமெண்டு மன்றத்திலும் வாய்ப்பறை கொட்டினுர்களே! அவர்கள் கூற்று மெய்யானுல், மேலதிகமான பொலிசாரை சிட்டகாங்கில் நிறுவக் காரணம் எனே? இந்த 5 வருஷ காலமாகவும், சிறு தொகையினரான வங்காளப் புரட்சிக்கட்சி வாலிபரை அடக்க முடியாத இந்திய அரசினர் பரந்த பாரத நாட்டை ஆள்வதற்குத் தகுதியுடையவரா என்னும் ஆச்சரியம் பிறக்கின்றது இயல்பே.

(தொடர்ச்சி 6-ம் பக்கம்.)

# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: ஸ்ரீமுகவருஷ மாசிமீ ௩௨ வியாழக்கிழமை.

## வகுப்புவாதக் கோடரிக்காம்புகள்.

"கோடாலி தன்னுளே மரமது நுழைந்து தன் கோத்திரமெலாம் அழிக்கும்" என்ற பிரகாரம் இந்த யாழ்ப்பாணத்திலே வகுப்புவாத முறையைக் கைக்கொள்ளவேண்டுமென்று தம் நயம் மாத்திரங் கருதுஞ் சிலர் முயற்சிசெய்யத் தலைப்பட்டு, முதல் இங்குள்ள தமிழ்மக்களுக்கிடையே பரஸ்பரம் வேற்றுமையையும் தமிழர் சிங்களர்க்கிடையே பகைமையையும் ஆக்கி, பிரித்தாளும் முறையைப் பூண்டுள்ள அரசினருக்கு வசதியைச்செய்து இலங்கைவாசிகளின் அடிமைத் திறத்தைப் பெலப்படுத்துதற்கான முயற்சிகளைச் செய்கின்றனர். இந்த வகுப்புவாதம் என்ற கொள்கை இக்காலத்திலே சீர்திருந்திய சாதியார் எல்லாராலும், விஷயமறிந்த அரசினர் எவராலும் பிழைபானது, நீதியற்றது எனத் தள்ளிபோதுக்கப்பட்ட முறையாகும். இந்த முறை ஒரு நாட்டிலே கைக்கொள்ளப்படுமாயின் அந்நாட்டினர் ஒத்துழைப்பதும் பொதுக்கருமத்தில் அபிமானம் பூண்பதும் சுவதந்திரத்தையடைவதும் கைத்தொழில் கமத்தொழில் வியாபாரம் கல்வியறிவு முதலியவற்றில் விருத்தியடைவதும் ஒருகாலத்தும் ஏலாதென்பது நிசம். இந்த வகுப்புவாதமே சாதியச்சண்டை, பொறாமை, சுயநலங்கருதுதல், நாட்டின் சீர்கேடு, அடிமைத்திறவிருத்தி, தரித்திரம் முதலாம் சகல தீமைகளையுந் தேடிவிடும் இயல்பினதாகும். "முத்தும் தம்முட் புரைச வுண்டானல் பந்திக்கப்படும்" என்பது பஞ்சதந்திரம். இலங்கையிலுள்ள சிங்களரும் தமிழரும் ஏனைய சாதியினரும் இந்த வகுப்புவாத மென்னும் புரைசல் (துவாரம்) காரணமாக, அரசினருடைய அதிகாரமென்னும் அறுக்கமுடியாப் பெரும் பாசத்தினற் பிணிப்புண்டு அதோகதியடைவரென்பது திண்ணம்.

இலங்கையிலுள்ள அயிரோப்பியர் வகுப்புவாதத்திற்குச் சார்பாய் நிற்கின்றனர். அவர்கள் அப்படி நிற்பது நூதனமல்ல. ஏனென்றால், பறக்கிற காகம் இருக்கிற கொம்பறியாதென்ற பிரகாரம், அவர்கள் ஏதோ தம் பிழைப்பின் பொருட்டு அங்கிருந்து இங்கு வந்து தோட்டம் வியாபாரம் என்னுமிவைகளை இங்கே நடத்திக்கொண்டு இங்கு ஈட்டிய செல்வத்தோடு தம் தாய்நாட்டிற்கு மீண்டுவிடுபவர்களாவர். அவர்களுக்கு இந்நாட்டினைப்பற்றிய அபிமானம் வருதற்கு ஏதுவில்லையே! அவர்கள் "உனக்கும் உன்கிளைக்கும் நாளும் உண்டியும் வாழ்வும் இங்கே, மனக்கருத்தங்கே" என்றவாறு சீவியம் ஊதியம் என்னுமிரண்டும் இலங்கையிலேயே ஆனாலும் தம் கண்ணுங் கருத்தும் அபிமானமும் அயிரோப்பியநாட்டிலல்லவா உள்ளவர்கள். வியாபார விஷயத்தில் நூற்றுக்கு 60 விகிதமான வியாபாரத்தை அயிரோப்பியரே நடாத்தி இலாபமுறுகின்றனர். 30 விகிதமான வியாபாரத்தை இந்தியர் நடத்தி நயமடைந்து செல்கின்றனர். இப்படியே 90 பங்கும் போய்விட 10 பங்கையே இங்குள்ள சிங்களர் தமிழர் இஸ்லாமானவர் பறங்கியர் என்னும் உள்நாட்டு மக்கள் பகுத்து வியாபாரம் செய்து ஏதும் பிழைக்கவேண்டியிருக்கின்றது முதற்பணமில்லாதவர்களாகிய உள்ளூர் மக்கள் வியாபாரத்தையேனும் விவசாயத்தையேனும் சீவனார்த்தமான வேறு எந்தக் கருமத்தையேனுஞ் செய்தற்கான உதவிகளையும் சௌகரியங்களையும் நமது அரசினர் எக்காலத்திலாயினும் இங்குள்ளவர்கட்குச் செய்தறியார். இந்தப் பணமுட்டான காலத்தில் தொழில்முயற்சியில்லாச் சந்தர்ப்பத்தில் உத்தியோகம் அகப்படாநேரத்தில், இலங்கைவாசிகள் சுவதந்திரத்தைப் பெறுதற்கும் முன்னேற்றமடைதற்கும் பெருந் தடையாகவுள்ள நவீன அரசாங்கசபையைச் சிறிது சீர்ப்படுத்தி நன்மையடையலாமெனச் சிங்களமக்கள் முயற்சிசெய்ய, அரசினர் தமக்குக் கைவந்த பிரித்தாளும் முறையைக் கையாளத் தொடங்கிக்கொண்டனர். அரசாங்கசபைப் பிரமாணங்களையும் நிபந்தனைகளையும் தகைந்து, யாழ்ப்பாணத்துள்ள தேசத்துரோகிகளும் சகோதரத்துரோகிகளும் சுயநலப்புலிகளுமாகிய வகுப்புவாதக் கட்சியாருக்கு, அவர்கள் கேள்விப்படி மூன்றுமுறை மறுத்தபின் நான்காமுறை அரசாங்கசபைப் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்தற்கான நியமன நாளைக் கொடுப்பதற்குச் சித்தங்கொண்டிருக்கின்றனர். இந்தப் புலிகளெனிலோ, வெள்ளாடு நனைகிறதென்று வேங்கை விம்மி விம்மி யழுதவாறாய் அரசாங்கசபையைப் பகிஷ்காரஞ் செய்தமையினால் இங்குள்ளார்க்கு உத்தியோகமில்லாமற் போய்விட்டது என்றும், அரசினர் தமிழ்மக்களைப் புறக்கணிக்கின்றார்களென்றும், சிங்களர்தான் இலங்கையை ஆளுகின்றார்களென்றும், இனித் தமிழரை அச்சிங்களவர் தலையெடுக்கவிடமாட்டார்களென்றும் தமிழ்மக்களுக்காகவே தாங்கள் பாடுபடுகிறோமென்றும் புலம்பி முதலைக்கண்ணீர்விட்டுத் திரிந்தவர்கள், இப்பொழுது வெள்ளாடு அகப்பட்டுக்கொண்ட தென்பதைக் கண்டவுடனே, தாம் சொல்லிய எல்லாவற்றையும் உடனுக்குடன் மறந்து, தாங்கள் நடித்த நடிப்பையும் விடுத்து நாற்பக்கமும் நாலுபுலிகளாக முற்பட்டுப் பதுங்குகின்றனர். இந்தப் புலிகளுக்கு ஒருவர் தோற்றத் தருச் சொல்லிக்கொண்டு நிற்கின்றார். அண்ணாவியார் தோற்றத்தருப் படித்தவுடன் புலிகள் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து வேதனமாகிய ஆட்டைப் புசித்துவிட்டுத் தம்மோடொத்த ஏனைய புலிகளையும் கழுதைகளையும் எருமைகளையும் குளுமாடுகளையும் குரங்குகளையும் குள்ளநரிகளையும் வௌவால்களையும் நாகபாம்புகளையும் நின்ற இடத்திற்றானே நிற்கவும் இருந்த இடத்திற்றானே இருக்கவும் கிடந்த இடத்திற் கிடக்கவும் தொங்குங் கொம்பில் தொங்கவும் ஒதுங்கிய புற்றில் ஒதுங்கவும் விட்டுவிட்டு, மாணிக்கவாசக சுவாமிகள் நடராசப் பெருமானைச் சுட்டிக் காட்டிக்கொண்டு உள்ளே சென்று அப் பெருமானோடு இரண்டறக் கலந்தவிதமாக, இவர்களும் "உங்களுக்கு நன்மைசெய்யத்தான் அங்கே போகிறோம்" என்று சொல்லி மேற்றிசையை நோக்கிக் கை காட்டிக்கொண்டு சென்று அரசாங்கசபையிலே அரசினரோடு இரண்டறக் கலந்துவிடுவார்களென்று நாம் எண்ணிக்கொள்ளவேண்டும், அங்ஙனம் செய்யப்புகின் இப்புலிகளைத் தடுப்பது எவ்வாறு?

### பனைவடலிக்குள் பிள்ளை.

வடலியடைப்பு என்னும் கிராமத்தில் உள்ள ஓர் பனை வடலிக்குள் பிறந்து சில நாட்சென்ற ஓர் ஆண்சிசு காணப்பட்டது. சம்பவம் விசாரணை மூலமாகப் பொலிசார்க்கு அறிவிக்கப் பட்டது. விசாரணையுட் பொலிசாரும், அப்பிள்ளையின் தாயைக் கண்டு பிடிக்க முயற்சித்தும் வாய்க்கவில்லை ஈற்றில் சங்கானையில் உள்ள ஓர் வீட்டில் வேலைக்காரியாயுள்ள பரப்பம்மா என்னும் ஓர் இளம்பெண்தானே அச்சிசுவின் தாய் என்றும், சோரக்காதலனுடன் கூடி அப்பிள்ளையைப் பெற்றதால் வெட்கத்திற்கஞ்சி, அதனை மறைத்தாளென்றும் தெரியவந்தது. இப்போது பிள்ளையும் தாயும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில இருக்கின்றனர்.

### பெண்ணை ஏமாற்றியவருக்குச் சிறை

மல்லாகத்தைச் சேர்ந்த இராசையா, சங்கரப்பிள்ளை, கந்தையா என்னும் மூவர் அவ்வூரில் உள்ள ஓர் பெண்ணை, குட்டிப்பிள்ளை என்னும் பெண்ணின் பெருவிரல் அடையாளத்தை ஓர் சாசனத்தில் ஏமாற்றி இடுவித்தனர் என்று யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நீதிஸ்தலத்தில் ஸ்ரீ குமாரசுவாமி முன்னிலையிற் குற்றஞ் சாட்டப்பட்டனர்.

முதலாம் எதிரியான இராசையா என்பவர் குட்டிப்பிள்ளை என்னும் மனுஷியின் மருமகனும் குட்டிப்பிள்ளையின் பேரில் உள்ள ஆதனத்தை இவர் விற்க முயற்சி செய்தார். ஆனால் அம்மனுஷி மறுக்கவே மல்லாகத்திலுள்ள இளைஞர்பெண்ணை, நொத்தாரிசிடம் அழைத்துச் சென்று, அவள்தான் குட்டிப்பிள்ளை என்று சொல்லி, சாதனம் பிறப்பித்து, அதில் அம்மனுஷியின் பெருவிரற்குறியை இடுவித்தார். சங்கரப்பிள்ளை, கந்தையா என்னும் இருவரும் சாட்சிகளாகக் கையொப்பமிட்டனர்.

விசாரணையின்பின் நீதிபதி எதிரிகளைக் குற்றவாளிகள் எனக்கண்டு 1-ம் 2-ம் எதிரிகளுக்குத் தனித்தனி 2 வருஷக் கடுங்காவற் சிறைத்தண்டனையும் 3-ம் எதிரிக்கு 1 வருஷக் கடுங்காவற் சிறைத் தண்டனையும் விதித்தார்.

### உலகம் பலவிதம்.

(முற்றொடர்)

"என்ன செய்யலாம். தம்பி, எனக்கும் வயசு 78 ஆய்விட்டது. அந்தக் காலத்திற்கும் இந்தக்காலத்திற்கும் எத்தனை வித்தியாசம் ஏற்பட்டுக் கொண்டது. ஐயோ, இந்தக்காலத்துப்பிள்ளைகள் ஆணானாலுஞ்சரி, பெண்ணானாலுஞ்சரி பிதா மாதாக்கள் பெரியோர் காரியமறிந்தவர் சொல்லும் புத்திமையைக் கேட்கிறார்களில்லையே. ஏதும் புத்திசொல்லப்போனால் "எல்லாம் எங்களுக்குத்தெரியும், நீ ஒன்றுஞ் சொல்லவேண்டாம்; உன்பழையவட்டைக்கட்டிவை" என்று ஏழுமரியாதைகளுடன் சண்டைக்கு வருகிறார்கள். அதற்கு மேற்பேசி மரியாதைகெடுவதைப் பார்க்கிலும் சும்மா ஒதுங்கிக் கொள்வது நல்லதென்றெண்ணிக்கொள்ள வேண்டியிருக்கிறது. இவைமாத்திரமோ, இக்காலத்திற் பிள்ளைகள் கடவுளைக் கைவிடார்கள்; கோயிலுக்குப் போகார்கள்; பழைய பழக்க வழக்க ஒழுக்கங்களைக் கைவிட்டு நவநாகரிகம் படைத்துத் தலைகிறுகிநின்று கூத்தாடுகிறார்கள்; சில மனுஷருடைய சகவாசங்கிடையாது, குடிகாரன், சூதாடுபவன், கபடி, தூர்த்தன், முதலானவர்களோடு சேர்ந்து கொள்ளுகிறார்கள்; வரவுக்கு மேற்பட்ட செலவு செய்கிறார்கள்; கண்டதேகாட்சி கொண்டதே கோலமென்று சாதிக்கிறார்கள் நூற்றிலொருவர் ஆயிரத்திலொருவர்தான் நல்ல பிள்ளையென்று கண்டவர்கள் சொல்லத்தக்கதாய் நடந்து கொள்ளுகிறார்கள். இதற்கு நாம் என்ன செய்வது? சில வாலிபரைப் பார்த்தால் பெண்டாட்டியே கண்கண்ட தெய்வமென்று பாராட்டி அவளைக் குறிப்பறிந்து நடக்கிறார்கள்; சில வாலிபர்கள் தன்னைநம்பி வந்த பெண்ணைக் கலங்கவிட்டு அவள் கொண்டுவந்த சீதனப்பணத்தையும் பொருள் பண்டங்களையும் கூடாத கூட்டங் கூடிக் குடித்து வெறித்து அழித்துவிட்டுக் கடைசியில தாமும் மண்ணாய்ப் போகிறார்கள்"

* * *

"ஆண்பிள்ளைகள் தாம் இப்படிக் கெட்டுப்போனார்கள்; பெண்பிள்ளைகள் திறமோ என்றால் அவர்களும் பழகாத பழக்கங்களைப் பழகி, நடவாத நடை நடக்கத் தலைப்பட்டு, வரவுக்குமேற் செலவழிக்கத் தொடங்கிக் கொள்ளுகிறார்கள்; குடித்தனத்தைச் செப்பமாக நடத்த அறியார்கள். ஆண்மாரித்தனமாக நடப்பவர்கள்தான் இக்காலத்தில் அதிகம்; ஆனால், ஒன்று சொல்லுகிறேன், பிள்ளை; இந்தப் பெண்களைப் பழுதாக்குவது அதிகமாக ஆண்பிள்ளைகள்தான்; அவர்களுக்கு இவர்களைக் கொண்டு நடத்தத் தெரியாது. இவைகளையெல்லாம் அறிந்துதானோ பிற்காலத்திலிருந்த புலவரொருவர் ஒரு பாட்டுப் பாடியிருக்கிறார். அதைக் கேளுங்கள்;

"தாய்புத்தி சொன்னால் மறுத்திடுங் காலம் உயர்
    தந்தையைச் சீறு காலம்,
சற்குருவை நிந்தைசெய் காலம் மெய்க்கடவுளைச்
    சற்றுமெண்ணாத காலம்
பேய் தெய்வமென்று உபசரித்திடுங் காலம் நற்
    பெரியோர் சொற் கேளாத காலம்
தெய்வுடன் பெரியவர் சிறுமையுறு காலம் மிகு
    சிறியவன் பெருந் காலம்
தெருவில்விட்டோடினோர் வரிசைபெறுகாலம்வசை
    செப்புவோர்க் குதவுகாலம்
வாய்மதம் பேசிவிடும் அநியாய காரர்க்கு
    வாய்ந்தகலி காலம் ஐயா,
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
    மலைமேவு குமரேசனே."

அப்படி, தம்பி, இது காலத்தின் கோலம்! இதில் நாம் ஒருவரையும் குறை சொல்லக் கூடாது. ஏதோ உங்களுடைய கருமமும் நான்தானே பார்க்கவேண்டியவன். அந்த முருகன் கிருபையால் இந்த முருகன் தலையிட்டு இதுவரையிற் கைகூடாத காரியம் ஒன்றுமில்லை. அவர் இருக்கிற இடத்திற்கு நான் ஒருமுறை போய்த்தான் வரவேண்டியிருக்கிறது. இன்னும் பல அலுவல் அவசியம் பார்க்கவேண்டியவை உண்டு; அடுத்த கிழமைவரையிற் போனாலென்ன" என்று முருகர் வேலாயுதம்பிள்ளைக்குச் சொன்னார்.

* * *

"அம்மான், ஏதோ கூடிய சீக்கிரத்தில் இந்தக் கருமத்தைப் பார்த்து வைத்தல் நல்லது. போய் வருதற்கான பயணச் செலவும் இன்னும் ஆகவேண்டிய செலவும் நான் தருகிறேன்; எப்பொழுது புறப்படுவதென்பதை மாத்திரம் இரண்டொருநாளுக்கு முந்திச் சொல்லி விடுங்கள்" என்று வேலாயுதம்பிள்ளை சொல்லிக் கொண்டிருக்கும்போது, அவருடையமனைவி, "அதுசரி கண்டீர்களோ, பிள்ளையின் சம்மதத்தையும் கேட்டுக் கொண்டல்லவோ, நாங்கள் அம்மானை அங்கேஅனுப்பவேணும்" என வேலாயுதம்பிள்ளை, "மெய்யே, அம்மான், அப்படிக் கேட்பது அவசியந்தானே" என்று முருகரைக் கேட்க, முருகர் "ஓம், தம்பி, அது சம்மதம் கேட்கத்தான் வேணும்; பெண்

### பண்டிதர் நேரு சிறையானார்.

#### இராசத்துரோகமான பிரசாரணத்தின்பேரிற் சிறை.

#### அன்னையைப் பிரியும் பரிதாபக்காட்சி.

பண்டிதர் ஜவகர்லால் நேரு சென்ற திங்கட்கிழமை சிறையாகிக் கல்கத்தாவுக்குச் செவ்வாய்க்கிழமை கொண்டுவரப்பட்டார். பிணை கொடுக்க மறுத்ததின் பேரில் அவரை இதுவரைக்கும் விளக்கமறியலில் வைக்கும்படி நீதிபதி கட்டளையிட்டார்.

கல்கத்தாவுக்கு இற்றைக்குச் சில நாட்களுக்குமுன் பண்டிதர் சென்றிருந்தார். அங்கு இராசத் துரோகமான ஓர் பிரசங்கம் செய்தார் என்ற குற்றத்தின் பேரிலேயே அவர் இப்போது சிறையாக்கப்பட்டிருக்கிறார்.

அவரைச் சிறையாக்க வந்த பொலிஸ் அதிகாரி அவரை நோக்கி, "தங்களை நான் சில நாட்களாகத் தேடித் திரிகிறேன்" என்று விகடமாகச் சொன்னாராம்!

வயது முதிர்ந்து நோயாளியாய் இருக்கும் தமது அன்னையிடமும், மனைவியிடமும் விடைபெற்றுப் பண்டிதர் பொலிஸ் அதிகாரியுடன் கல்கத்தா சென்ற காட்சி கல்லையும் உருக்குந் தன்மையதாம்.

பண்டிதர் அவர்கள், சமீபகாலத்திற்றான் பீகாருக்குச்சென்று கஷ்டநிவாரணத் தொண்டு செய்து திரும்பியவராவர். அரசினர் பண்டிதரைச் சிறையாக்கச் செய்துவந்த முயற்சியைப் பற்றி இற்றைக்குச் சின்னாட்களுக்கு முன் இப்பத்திரத்தில் வெளியிடப்பட்டது.

### பச்சாத்தாபப்படுகின்றோம்.

சென்ற திங்கட்கிழமைப் பிரசுரத்தில் மிஸ்ரர் எமானுவலின் சிறைத்தண்டனை விஷமாகவெளியிட்டபுதினத்தில் 12 மாசம் என்பதற்குப் பதிலாக 12வருஷம் என்று தவறாக வெளிவந்து விட்டது. பராமுகத்தால்நேர்ந்த இப்பிழையின் பொருட்டுப் பெரிதும் வருந்துகின்றோம்.

மேலும், சென்ற ஞாயிற்றுக் கிழமை (11-2-34) வெளிவந்த ஈழகேசரியில், பாலபண்டித முருகவரோதயன் என்னும் ஒருவர் "இந்துசாதனத்தில்" இப்படி! "ஈழகேசரி"யில் அப்படி!! என ஒரு ஆசங்கை வெளியிட்டுள்ளார். விஷயம், இற்றைக்குச் சில மாசங்கட்கு முன் வெளிவந்த ஈழகேசரியிலிருந்து ஒரு புதினத்தை எடுத்துச் சிறிது திரித்து வெளியிட்டமையாகும். அந்தத் திரித்தல் வேணுமென்று செய்யப்பட்டதன்று. பராமுகத்தால் வந்ததாகும். அதன் பொருட்டு இந்துசாதனத்தையும் சைவ பரிபாலன சபையாரையுங் குறைகூறவேண்டா. அப்படிபராமுகத்தால நேர்ந்தவற்றையிட்டு நாம் பெரிதும் பச்சாத்தாபப்படுகிறோம்.

உதவிப் பத்திராசிரியர்.

ணின் சம்மதங் கேளாமல் பிதாமாதாக்கள் ஒன்றைப் பேசுவதும் செய்வதும் அந்தக் காலத்திலாகும். இப்பொழுது காலம் மாறிக்கொண்டது; பிள்ளை நீ போய், தங்கச்சிக்குக் காரியத்தைச் சொல்லி, சம்மதந்தானோ என்று கேட்டுவாரும்" எனவும் தாய வீட்டினுள்ளே சென்று சொல்லிக் கேட்க, மகள், என்னைக் கொன்றாலும் நான் இனி அங்கே போகமாட்டேன, வேணுமானால் அவர் இங்கே இடையிடையே சிறுதலை நாட்களில் வந்து போகட்டும்" என்றாள். மகள் சொன்ன மறுமொழியைத் தாய் புருஷனுக்கும் முருகருக்கும் சொன்னாள். முருகர் "ஓம் பிள்ளை, அதெல்லாம் பிறகு சரிவரும்; பிறகு நாங்களுக்கேதவையில்லை" என்று சொல்லி மெல்லச் சிரித்தார்.

* * *

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது தபாற்காரன் இந்துசாதனம் முதலிய சில பத்திரிகைகளையும் இரண்டு கடிதத்தையும் ஒரு போஸ்காட்டையும் கொண்டுவந்து வேலாயுதம்பிள்ளைகையிற்கொடுத்துப் போனான். அக்கடிதங்களில் ஒன்றின்மேல் விலாசத்தை உற்றுப்பார்த்துப் படித்துவிட்டு "இது பிள்ளைக்கு அவர் எழுதிய கடிதம்போலிருக்கிறது" என்று சொல்லி மகளிடங் கொண்டுபோய்க் கொடுக்கும்படி தன் மனையாளிடங் கொடுத்தார். அவள் அதைத் தன் மகளிடங் கொடுக்க மகள் கைநடுக்க அச்சத்தோடு வாங்கித் திறந்து பார்த்தாள் "என்னவாம் பிள்ளை" என்று கேட்டுத் தாயும் பக்கத்திலே நின்றாள்.

(வரும்.)

# உபதேச காண்டம்.

## ஏழாவது

## பஞ்சாக்கர மான்மியச் சருக்கம்.

(முற்றொடர்.)

இந்தப்பிரகாரம் தருமன் உத்தரஞ் சொல்லக் கேட்ட பிருகுமுனிவர் சிறிது சின முற்றாரெனினும் அச் சினத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு அவனைப் பார்த்துப் பின் வருமாறு கூறுகின்றார்:

"சிறுவனே, மூலமாய் நடுவாய் முடிவாய் முதற்பெரும் பொருளாய் நிலம் நீர் நெருப்பு காற்று ஆகாயம் என்னும் ஐந்து பூதங்களாய் மேலானதாய்க் கீழானதாய் உண்மையாய் பொய்யாய் முக்காலமுமாய் உயிர்கள்தோறும் மறைந்துள்ள ஒரு பொருள் உண்டு. அது இல்லறம் துறவறம் என்னுமிரண்டினும் ஒரேதன்மையான பயனைத் தரத்தக்கது. அதுவே ஐந்தெழுத்தெனப்படும். அதனை இப்பொழுதே உனக்கு உபதேசிக்கின்றேன்; நீ உணர்ந்து கொள்ளுதி" எனக் கூறி அங்ஙனம் பஞ்சாக்கர உபதேசஞ் செய்யவே, அவன் தெளிவடைந்தான். பின்னரும் முனிவர் அவனை நோக்கி, "துறவு பூண்ட நின் நண்பனாகிய சந்திரசேனனே, மோட்சத்தை அடையும் மார்க்கம் எது என்று உன்னை அடைந்து வினவத்தக்கதாக இந்த ஸ்ரீ பஞ்சாக்கரத்தை நீ அநுதினமும் இடையறாது கிரமமாகச் செபிக்குதி" என்றார்.

முனிவருடைய உபதேசத்தைப் பெற்ற மாத்திரத்தே தருமன் ஞானமடைந்தானாய்த் தான் துறவறத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தைத் தவிர்த்தான். அதனைக்கண்ட அவன் பிதாமாதாக்களும் பேருவகை அடைந்தனர். பிருகு முனிவர் தாமாகவே ஒரு சுபமுகூர்த்தம் நிச்சயித்து அவன் பெற்றோர் மூலமாக அவனுக்கு அழகிலும் கற்பிலுஞ் சிறந்த ஒரு கன்னிகையை விவாகஞ் செய்வித்து வைத்தார். தருமன் தன் மனையாளோடு இல்லறத்தை இனிது நடாத்தினன். தன் குருவாக்கின்படி பஞ்சாக்கர செபத்தைக் கிரமமாக அல்லும் பகலும் செய்து வந்தான்.

தருமன் ஒழுக்கம் இவ்வாறாக, அவனது நண்பனாகிய சந்திரசேனன் தவ ஒழுக்கத்தை மேற்கொண்டானாய், கமண்டலம், குடை, திரிதண்டு என்னுமிவற்றைப் பரித்தானாய் ஒரு தினம் தருமனிடம் வந்தான்; அவன் வரவைக்கண்ட தருமன் பெருமகிழ்ச்சியடைந்தானாய் அவனை எதிர்சென்று அழைத்துச் செய்யவேண்டிய உபசாரங்கள் அனைத்தையுஞ் செய்து, அமுது செய்வித்துத் தொன்மை பாராட்டி நின்றான். அப்பொழுது துறவறத்தை மேற்கொண்ட சந்திரசேனன் பரிவுடன் தருமனைப் பார்த்து, "அன்பனே, நீ அரிதிற் கற்ற கல்வியினால் அடைந்த ஞானம் முழுவதையும் கமரில் உகுத்த பால்போல அநியாயமாகக் கெடுத்தனை, வேதத்தின் நுட்பங்களையெல்லாம் கைவிட்டனை; உன் கோத்திரத்திற்குரிய மேலான ஆசாரங்களினின்றுந் திறம்பினை; இல்லறத்திற்கு ஆசைப்பட்டு அரிய தவ ஒழுக்கத்தை வெறுத்தாய்; நீ எங்ஙனம் ஈடேறப்போகின்றாய்; இல்லறந் துறவறம் என்னுமிரண்டினுள்ளும் துறவறமே சிறந்ததாகும் இல்லறம் குறைந்ததாகும். ஆதலால் உன் அரிய வாழ்நாள் அவமே கழிபலாயது; யான் தவத்தினால் சுவர்க்க உலகத்திலுள்ள கற்பக தருக்களையும் அந்த உலகத்திற்கு அரசனாகிய இந்திரனையும் நினைத்த மாத்திரத்தே இங்கே தருவிக்கும் வலிமை பெற்றுள்ளேன்; நீயெனிலோ, பெண்ணாசையின் பாற்பட்டு, கற்ற வேத நுட்பங்களை மறந்து சிந்தனை சிறியையானாய்; என் தவமாண்பினால் திருமால் முதலாந் தேவரையெல்லாம் நினைத்தபடி அழைக்கவும் போக்கவும் வன்மை பூண்டுள்ளேன்" என்று தருக்குடன் கூறினன்.

இவற்றையெல்லாங் கேட்ட தருமன், "இவன் அறியாமை யிருந்தபடியென்னை" என்று தன் மனத்தில் நினைத்துச் சிரித்துப் பின் அவனை நோக்கி, "சந்திரசேனனே, இல்லாச்சிரமி இல்லையாயின், பிரமச்சாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி என்னும் மூவகை ஆச்சிரமிகளும் தத்தம் ஆச்சிரம தருமங்களை முட்டின்றி முடித்தல் எங்ஙனம்? இல்வாழ்வானென்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றினின்ற துணையென்பதை அயர்த்தனை போலும்; தேவர்கட் கரசனாகிய இந்திரனை நீ இங்கே அழைப்பாயெனில், நானும் அங்ஙனஞ் செய்யவல்லேன் என்பதை விளங்கிக்கொள்" என்றான். உடனே சந்திரசேனன் சிறிது சீற்றங்கொண்டானாய் இந்திரனை வரும்படி நினைக்க, அங்கே இந்திரன் விரைந்து வந்து அவனைப் புகழ்ந்துவிட்டு மீண்டான். அந்த இந்திரனைத் தருமனுக்குச் சுட்டிக் காட்டி நின்ற சந்திரசேனன் அவனை நோக்கி, "தருமனே, உன்னாற்கூடுமானால் நீயும் இங்ஙனஞ் செய்து காட்டுதி" யென்றான். தருமன் உடனே சிரத்தையுடன் பஞ்சாக்கரத்தைச் செபிக்கவே தேவர்கோன் வெளிப்பட்டு அங்கேவந்து அவனை மும்முறை வலஞ் செய்து வணங்கி மிக்க விநயத்துடன் நிற்றலும் தருமன், "தேவர்கோனே செல்லுதி" யெனலும், தேவர்கோன் மீட்டும் வணங்கிவிட்டு விண்ணுலகை நோக்கிச் சென்றான். இந்நிகழ்ச்சியைப் பார்த்த சந்திரசேனன் அச்சத்துடனும் ஆச்சரியத்துடனும் நிற்க, தருமன் அவனைப்பார்த்து, "சந்திரசேனனே, நான் இப்பொழுது பிரமதேவனை அழைக்கட்டுமா" எனலும், அவன், "அங்ஙனம் நீ செய்வையேல் நானும் உடனே செய்வேன்" என்றான். உடனே தருமன் ஐந்தெழுத்தைச் செபிக்க பிரமதேவர் வெளிப்பட்டு, "தருமனே, என்னை நீ இந்தச் சமையத்திலே தியானித்தது எனது பாக்கியமாகும்" என்று சொல்லி, அவனை மும்முறை வலம் வந்து வணங்கி நிற்க, "சுவாமீ, தேவரீருடைய உலகத்திற்குச் சென்றருள்க" என்று தருமன் புகல, பிரமதேவர் இந்திரன் முதலாம் முப்பத்துமுக்கோடி தேவர்கள் வழுத்தச் சத்திய உலகத்திற்கு மீண்டார். தருமன் பின்னர்ச் சந்திரசேனனைப் பார்த்து, "உன்னாற் கூடுமானாற் பிரமதேவரை மீண்டுவரச் செய்குதி" யெனலும், அவன் நாணமுற்றானாய்ப் பிரமதேவரைத் தியானித்துக்கொண்டு யோகத்திலிருந்தான். ஆனாற் பிரமதேவர் பின்பு வந்திலர். இவையனைத்தையும் பார்த்து நின்றவர்கள் பேரற்புதமடைந்து "நீயே இப்பூவுலகிற் கண்கண்ட தெய்வம்" என அவனை வணங்கித் துதித்தனர். சர்வபங்கமடைந்த சந்திரசேனனும் அவனை வணங்கி, "திருவருட் செல்வனே, உன் தவப்பேராற்றலை உணராமையினால் நான் செய்த அபராதத்தைப் பொறுத்தருளுதி; புண்ணியம் உன்னிடத்திற் குடிகொண்டுவிட்டது; நீயே குருமூர்த்தியாகவிருந்து சிறியேனுக்கு ஞானோபதேசஞ் செய்தல் வேண்டும்" என்று இரந்து நின்றான். அதனைக் கேட்ட தருமன் அன்புகூர்ந்து சந்திரசேனனுக்குப் பஞ்சாக்கர உபதேசஞ் செய்து அவனை ஈடேற்றினன்; இருவரும் தொன்மை நட்புப்பூண்டவராய்ப் பஞ்சாக்கர செபஞ் செய்துகொண்டு உலகத்தவர் வணங்கிப்போற்ற நீடித்த காலம் வாழ்ந்தனர். தருமன் இங்ஙனம் தன் சந்ததி விர்த்தியாக இல்லறத்தை இனிது நடாத்தி, பஞ்சாக்கர தியானத்தின் பயனாகப் பரமசிவன் திருவடி நீழலையடைந்தான். சந்திரசேனனும் அங்ஙனமே மேலான கதியை யடைந்தான்."

—(வரும்.)


## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

—(*)—

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டக்கோவைச் சட்டத்தின்படி லைசென்ஸ்பெற்று அடைவுபிடிக்கும் திரிகோணமலை 8-ம் நெம்பர் நாகக்கடை வீதி வே. த. சிதம்பரப்பிள்ளை வெற்றிவேற்பிள்ளை & தம்பிப்பிள்ளை என்பவர்களிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1932ஆடு 2மீ

| இல. | திக. | ரூ. | ச. | நகைகளின் விபரம். |
|---|---|---|---|---|
| 2506 | 3 | 12 | | வட கடுக்கன் 4 |
| 2514 | 3 | 15 | | பொன்தோடுசோ. 1, திருகுபூ1 |
| 2564 | 6 | 6 | 04 | பெண் குச்சு சோடி ஒன்று |
| 2702 | 16 | 12 | | வளையல் 8 |
| 2760 | 20 | 15 | | புஷ்பராகக் கல் மோதிரம் 1 |
| 2769 | 20 | 20 | | பொன் கம்பிப் பூரானட்டியல் 1 |
| 3மீ | | | | |
| 2910 | 1 | 15 | 04 | டி இமிற்கல் பதக்கம் 1 |
| 2934 | 3 | 45 | | சம்புகுதவளையல் 2 |
| 2939 | 3 | 15 | | கைச்சங்கிலி 1 |
| 2940 | 3 | 30 | | கைச்சங்கிலி 1 |
| 3024 | 11 | 9 | 04 | சேட் பெட்டான் 2 |
| 3140 | 20 | 5 | 25 | வெ பாதசரம் சோடி 1 |
| 3148 | 20 | 27 | | பொன் தாலிக்கொடி 1 |
| 4மீ | | | | |
| 3300 | 2 | 11 | | இகல் புரூச் 1 வெ சாம்புகை படக்கூர் 1 |
| 3307 | 2 | 13 | 04 | வட கடுக்கன் 6 |
| 3490 | 15 | 8 | | வளையல் 8 |
| 3507 | 16 | 6 | | இ கல் கவுத்தோர் 1 (சாம்பற் செம்பு) |
| 3512 | 16 | 10 | 04 | கொப்புச்சிமிக்கி சோடி 2 |
| 3522 | 17 | 7 | | பூசாந்திரம் 1 |
| 3578 | 21 | 5 | 50 | செருகுதோடு சோடி 1 |
| 3678 | 29 | 15 | | பி இ சவுக்கமணிக் கோர்வை 1-க்கு மணி 19 |
| 5மீ | | | | |
| 3769 | 7 | 10 | 50 | இ கல் கடுக்கன் சோடி 1 |
| 3859 | 13 | 6 | | கல் மோதிரம் 1 |
| 3868 | 14 | 11 | | இ கல் கடுக்கன் சோடி 1 |
| 4070 | 28 | 14 | | சிறு அச்சுக்காப்பு 1 |
| 6மீ | | | | |
| 4176 | 6 | 5 | 50 | கலாவரை மோதிரம் |
| 4306 | 14 | 17 | | வெ 2 பட்டரைஞாண் 1 |
| 4355 | 19 | 9 | 50 | வளையல் 7 |
| 4364 | 19 | 6 | 75 | சிகப்புக்கடுக்கன் சோடி 1 |
| 4447 | 25 | 6 | | சிறு தங்கக்காப்பு 1 |
| 4477 | 27 | 22 | | தங்ககாப்பு சோடி 1 |
| 7மீ | | | | |
| 4584 | 7 | 42 | 04 | இலைமாலைப் பதக்கம் 1 |
| 4611 | 8 | 5 | 50 | சிறு கலாவரை மோதிரம் 1 |
| 4780 | 22 | 6 | | கொப்புச்சிமிக்கி சோடி 1 |
| 8மீ | | | | |
| 210 | 19 | 10 | | சிறு அச்சுக்காப்பு 1 |
| 211 | 19 | 15 | 04 | இ கல் பதக்கம் 1 |
| 251 | 23 | 6 | 04 | கைவிலங்கு 1 |
| 252 | 23 | 8 | 50 | வெ பாதசரம் சோடி 1 |
| 360 | 31 | 50 | | கல் பென்டன் 1 |
| 9மீ | | | | |
| 392 | 3 | 18 | | இ கல் கவுத்தோர் 1 |
| 410 | 5 | 10 | | டி இ கல் பதக்கம் 1 |
| 413 | 5 | 60 | | தாலிக்கொடி 1 |
| 473 | 11 | 10 | 04 | தங்ககாப்பு சோடி 1 |
| 542 | 17 | 10 | 04 | கற்தோடு சோடி 1 சிறுமினகு மோதிரம் 1 |
| 562 | 18 | 6 | 04 | சாமந்திப் பூ 1 |
| 661 | 27 | 205 | | முகப்புடன் முரிச்சக்குத்திக் கொடி 1 |
| 691 | 29 | 6 | | அரைப்பவுன் 1 |
| 10மீ | | | | |
| 725 | 2 | 15 | 04 | இ கல் காதோலை சோடி 1 |
| 729 | 2 | 9 | | மோதிரம் 1 |
| 753 | 4 | 12 | | ஒரு கல் செவ்வந்தி தோடு சோடி 1 |
| 849 | 14 | 11 | | சிறுபொட்டு பத பொன் சறடு 1 |
| 919 | 21 | 6 | | சிறு திருகுபூ1 |
| 930 | 22 | 8 | | கைபிடி மோதிரம் 1 |
| 951 | 24 | 50 | 36 | கைபிடி மோதிரம் 1 இ கல் மோதிரம் 1 கொப்புச் சிமிக்கி சோடி 1 இ கல் இலை படக்கூர்1 இ கல் பதக்கம் 1 |
| 960 | 24 | 15 | | தோடு சோடி 1 கொப்புச் சிமிக்கி சோடி 1 |
| 973 | 26 | 10 | 25 | பூசாந்திரமுடன் மணி 8 |
| 986 | 27 | 17 | 04 | இ கல் மோதிரம் 1 இ கவுத்தோர் 1 |
| 992 | 27 | 7 | 04 | கைவிரல் படக்கூர் 1 கொப்புச் சிமிக்கி சோடி 1 |

விற்பனவு:—ஸ்ரீமுக வருஷம் மாசி மாதம் 19-ந் திகதிக்குச் சரியான (2-3-34) வெள்ளிக்கிழமை காலை 8 மணிதொடக்கம் ஏடுபட்டநகை பிறகேலாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. பொ. விசுவநாத உடையார்,
வெந்தீன் மேந்தர்,
திரிகோணமலை.

(Mis. 207. 12&15-2-34.)

"காண்டிநேண்டல்"
கம்பெனியின் தொழில்
வருமானம் **Rs. 1,500,000.**
ஜீவிய நிதியில் சேருங்கள்.
மாதம் ரூபா 2.
**10** வருஷத்தில் ரூபா. **500**
ஆதாயம் பெறுவீர்கள்.
ஏழைகளும் செல்வரும்
விரும்பக்கூடிய கம்பெனி.
கிளை ஆபீஸ்கள்: சாவகச்சேரி,கண்டி,மட்டக்களப்பு.
**E. P.** புயூஎல். உடுவில், மானிப்பாய்,
இலங்கைப் பிரதம பரிசோதகர்,
(H. 77. 17 8-33 to 16-2-34.)

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகனன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, ஜாவித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தான், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த, செந்தூரம், சாம்பிராணிப்பதங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு,நீர்க்கடுப்பு,நீரடைப்பு, மூலச்சூடு, திருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள் பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைருத்தலுக்கு ரூபா ௧0. கால்ருத்தலுக்கு ரூபா ௫. தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணிஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்.
க. ஆறுமுகம்பிள்ளை,
சிங்ஞான ஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்து,
மட்டக்களப்பு
Y 179. 1-1-34 to 31-12-34) சிலோன்.

## மலேரியா
## மஹா தைலம்.

உங்களுக்கு மலேரியா என வழங்கும் மலைச்சுரந் தணியவேண்டில் இத்தைலத்தை உபயோகியுங்கள். இன்னும் தொய்வு ரோகத்துக்கு இது கைகண்ட தைலம் நூற்றுக்கணக்கானோர் நற்சாட்சிப்பத்திர மளித்துளர். கணைக்கு இன்றியமையாதது. இருமல், தொய்வு, ஈளை, பீநசம், தேக எரிவு, 'ஹிஸ்ரியா" வாய்வு இப்படியான ரோகங்களை மாற்றுவதில் வலிமை உள்ளது.

இங்ஙனம்,
பொ. செல்லையா,
ஆயுர்வேத வைத்தியன்
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்
(Y. 204. 12-2—11-2-35)

## வெளி வந்துவிட்டது!



கந்தபுராணம்—நகாழிபடலவுரை
[1934-ம் 35-ம் ஆண்டுக்குரிய கேம்பிரிஜ் ஜூனியர்ப் பாடமாகவுள்ளது]

பதவுரை, கருத்துரை, விசேடவுரை, ஆங்கிலமொழி பெயர்ப்பு, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் எழுதியுள்ள நூலாசிரியர் வரலாறு என்னுமிவைகளுடன், வெளிவந்துவிட்டது.

☞ விலை சதம் **50.**

ஐந்து பிரதிகளை ஒரே முறையில் வாங்குவர்களுக்கு 1 பிரதி மேலதிகமாகக் கொடுக்கப்படும்.

வண்ணார்பண்ணை 23-12-33. } மானேஜர், இந்துசாதனம்.

இறும்! இறும்!!

## மகாராஜ தத்துவ சாலாமிஸ்ரி லேகியம்.

ஒரே வேளையில் ஆண்சிங்க மாவீர்கள்.

தங்கம் வெள்ளி முத்து பவளம் அயம் காந்தம் அம்பர் கஸ்தூரி சாலாமிஸ்ரியும் இன்னும் அநேக மூலிகையும் சேர்த்து சாஸ்திர முறைப்படி செய்யப்பெற்றது.

இதன் முக்கிய குணம்:—

காலை இடுப்புவலி வாதவலி அசதி சூடு முதலிய மற்ற ரோகங்களனைத்தையும் சங்காரஞ் செய்யக்கூடியது இப்பூவுலகில் இந்த லேகியமொன்றே. முழுவிபரக்கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்; அவர் அவர் வியாதிக்குத் தக்கபடி ஒரு மண்டலம் அரை மண்டலம் சாப்பிடவேண்டும் 1 மண்டலம் சாப்பிடின் ரூ. 10 0 0. ½ மண்டலம் ரூ. 5 0 0. ¼ மண்டலம் ரூ. 2 12 0

ஹக்கீம் V. A. றஜாக் கம்பெனி,
பறங்கிப் பேட்டை, (S. I.)

(Y 147. 20-11-33to19-11-34.)




எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!

றங்கூன் தேக்கமரங்கள். பெயர்பெற்ற "பவுண்மார்க் ஓடுகள்."

தற்போது பேரானந்தவல்லி என்னும் கப்பலில் புதிதாக தேக்கமரங்களும், சிலாகைகளும் எங்களுக்கு வந்திருப்பதால் சென்ற திங்கட்கிழமை (5—2—34) தொடக்கம் பெரிய கடையிலுள்ள எங்கள் ஸ்ரோரில் பெற்றுக்கொள்ளலாம்.

திறமான

## பவுண்மார்க் ஓடுகள்.



இன்னும் ஏறக்குறைய ஒரு வாரத்தால் யாழ்ப்பாணம் ரேகில் சகாயவிலைக்குப் பெற்றுக்கொள்ளலாம். தேவையானவர்கள் முந்தியே அறிவிக்கவேண்டியது.

சி. வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ்.
யாழ்ப்பாணம்.

Phone No. 93.

(Y. 3. 26-4-34).



காலத்துக்குத்தக்க மலிவுவிலை!

## மங்களூர் ஓட்டுக் கம்பேனி.

மிலிற்றறி, கவர்ன்மெண்ட், முனிசிப்பல்

கொந்திருத்துக்காரர்.

மோர்க்கன் ஓடு, 1931 தொடக்கம் வருஷக் கொந்திருத்தாய் கவர்ன்மெண்டுக்குக் கொடுக்கப்பெற்று வருகின்றது.

வேறு எந்த ஓட்டிலும் இல்லாத இரண்டு வரைகள் மோர்க்கன் ஓட்டில் இருக்கின்றன. இவை அடைமழைக்கும் ஓட்டைக் கசியவிடாது காத்துக் கொள்ளும்.

பத்துப் பதக்கம் பரிசுபெற்று, மற்ற எல்லா ஓட்டிலும் பார்க்க, அதிகம் இடத்தை மூடக்கூடிய எங்கள் தங்கமேடல் ஓடுகள் (Secretariat, State Council Chamber) இராசாங்கப் பெரிய கந்தோர்கள், கவுன்சில் மண்டபம் முதலிய கட்டிடங்களுக்குப் பாவிக்கப்பெற்று வருகின்றன.

தலைநகரக் கந்தோர்:—64-ம் நி-ர். ஆதிருப்பள்ளித்தெரு,
கொழும்பு.

க. சே. த. சே. செல்லையாபிள்ளை:-316-ம் நி-ர். கிட்டங்கித் தெரு, யாழ்ப்பாணம்.

சோமசுந்தர முதலியார் வளவு:-வில்லூன்றி. திருக்கோணமலை.

W. B. S. தர்ம சூரிய:-பெட்டிக்கலவத்தை, காலி.

பல இடங்களுக்கும்போய், எங்கள் ஓடுகளை விற்க ஏசென்ராய் சுன்னாகம் இ. தாமோதரம்பிள்ளை நியமிக்கப் பெற்றிருக்கின்றார்.

Y. 2. 31-3-34.)



## பிரப்பங்குளம் மரக்காலை.

எங்கள் மரக் காலையில் பனைமரம், சலாகைகள், பாலை, வேம்பு, பலா, முதிரை, மா, சமண்டலை, சப்புமரம், வேண்டிய பிரமாணமுள்ள திராந்திகள், பலகைகள், சட்டங்கள், வாங்கு மேசை அலுமாரிகள், விறகு என்னுமிவைகள், வைக்கோல் நெல் இன்னும் வேண்டிய பொருள்களும் எந்த நேரமுங் கொடுக்கப்படும்.

ஒருமுறை எங்கள் சாலையை வந்துபாருங்கள்

மு. தம்பியையா,
பிரப்பங்குளம்ரோட்டு
வண்-மேற்கு, யாழ்ப்பாணம்.

(Y. 37. 9-8-3-34.) (வி)



## திருநெல்வேலி ஒற்றுமை நிதி

(வரைவுளது)

மூலநிதி ரூ. **500,000.** பங்கு ஒன்று ரூ. **25.**

25 சதமாக எண்பதுமாதங்கள்கொடுத்து ரூ 25ம் ஆதாயமும் பெறலாம்.

இந்நிதியின் கிளையாய்

உணவு பொருள் பண்டகசாலை

ஸ்ரீமுகவருஷ கார்த்திகைமீ 7உ (22-11-33) புதன்கிழமை இரவு 3 மணி 47 நிமிடத்தின்மேல் ஆரம்பம்.

நோக்கங்கள்:—

1. யாவருக்கும் கைமுதல் ஆக்கல்
2. சுதேசி வியாபார விருத்திசெய்தல்
3. கைத்தொழிலை உயிர்ப்பித்தல்

யாவரும் ஆதரிக்கவேண்டியன இவையே!
உள்ளூர் விளைபொருள், கைத்தொழிற் பொருள்
ஏற்று விலையாக்கி தரவுகூலி பெறுவோம்.

வ. சோமசுந்தரம்,
திருநெல்வேலி ஒற்றுமைநிதிக் காரியாதிகாரி.

(Q. 140. 16/11/33 to 15/2/34.) வி.



## புறுடென்ஷல் வீமாக் கொம்பெனி.

1932-ம் வருஷ ஆதாய நன்கொடை (போனஸ்)

1932-ம் ஆண்டிற்கு முன்பதாகவே முடித்த பூரண ஆயுள் உறுதிகளின் பேரில் ரூ. 1000-க்கு ரூ. 31/வீதம்

தவணை உறுதி (என்டௌமென்ற்) களின் பேரில் ரூ. 1000-க்கு ரூ. 28/வீதம்

1932-ம் ஆண்டிலேயே முடித்த பூரண ஆயுள் உறுதிகளின் பேரில் ரூ. 1000-க்கு ரூ 23/= வீதம்

தவணை உறுதி (என்டௌமென்ற்) களின்பேரில் ரூ. 1000-க்கு ரூ. 20 வீதம்,

அசைவற்ற காத்திரமான நிதிகளில் பணங்களை மிக ஜாக்கிரதையுடன் சேமித்து வைத்திருப்பதினாலேயே மேற்கூறிய பெரும் நன்கொடைகளை பணமுட்டு நிறைந்த இக்காலத்திலும் கொடுக்க இயன்றது.

வீமாத் திருவதானால்
புறுடென்ஷலில்
செய்து கொள்ளவும்.

உலகத்தில் மிகக் கூடிய தொகையானவர் சேர்ந்திருக்கும் கொம்பனி. தற்சமயம் 2 கோடி 75 லட்சம் பேர்கள் சேர்ந்திருக்கின்றார்கள்.

350,00,00,000 ரூபாவுக்கு மேலானதொகை பொறுப்பானது.

எமது இலங்கை அரசிறை வருமானத் தொகையைப்போல் ஏறக்குறைய 8மடங்கு வருமானமுடைய மிகப்பெரிய கொம்பனி. நிமிஷமொன்றிற்கு ரூ. 3000/ மேலான வருமானமுள்ளது.

வேண்டிய விபரங்கள் கீழ்க்காணப்படுபவர்களிடத்தில் அறிந்து கொள்ளலாம்.

க. சொர்ணலிங்கம்,
வடஇலங்கை மேற்பார்வைக் காறன், மானிப்பாய்.
Delmege Forsyth & Co. Ltd. Agents.
The Prudential Assurance Co. Ltd. Colombo

(Y. 180 1-1-34 to 31-12-34) வி.



கோடைகாலத்திற் பிடிக்கும்

தலைவலியைத் தடுப்பதற்காக

ஒரு போத்தல்

## லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்

## தைலத்தை

வாங்கி வைத்திருங்கள்.

இந்தியாவில் சிறந்ததும் முதன்மையானதும்,

Y 18. 11-2-33—10-2-34.)

## அன்பர்களே! சிந்தியுங்கள்!

எமது தாய் நாட்டார் பூகம்ப அநர்த்தத்தில் அகப்பட்டுப் படுங்கஷ்டங்களை நாடோறும் பத்திரிகைகளிற் படித்த பின், நாம் அன்னவருக்கு உதவி செய்யாதிருக்கலாமா? உதாரத்துவத்தில் தலைசிறந்த தமிழ் மக்களல்லவா நாம் எல்லோரும்! காலதாமதத்தால் ஆம்பயன் இல்லை. ஆதலால், தங்களால் இயன்ற பண உதவியைச் செய்யுங்கள்! சிறுதுளி பெருவெள்ளமாய் முடியும். போம் பொழுது அருந்துணை புரிந்த புண்ணியம் என்பதை மனத்திற் கொண்டு, தங்கள் தருமத்தை இந்த இந்துசாதனாலயத்திற்குத் தாமதமின்றி அனுப்புங்கள்.

எம்மால் ஆரம்பிக்கப்பட்ட பூகம்பசேத சகாயநிதிக்கு இற்றைவரை உதவியவர்கள் வருமாறு:—

| | ரூ. ச. |
|---|---|
| முன்னர் உபகரிக்கப்பட்ட தொகை. | 408-01 |
| யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்தில் 26140 ம் இலக்க வழக்கில் ஒப்புவிக்கப்பட்ட வழக்குலைகள் விற்ற யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிபதி மூலமாக இ. சா. பூ. சே. ச. நிதிக்கு அனுப்பப் பட்டது | 2 00 |
| சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவரும் ஆசிரியர்களும் | 13 61 |
| சாவகச்சேரிச் சைவாங்கில வித்தியாசாலை மாணவர் | 9 73 |
| ஷெயூர் வித்தியாசாலை ஆசிரியர்கள் | 12 00 |

உரும்பராயச் சைவாங்கில வித்தியாசாலையும், சாந்தநாயகி வித்தியாசாலையும்.

| | ரூ. ச. | |
|---|---|---|
| ஸ்ரீ R. நவரத்தினம் | 2 00 | |
| „ M. செல்லத்துரை | 1 00 | |
| „ M. நாகலிங்கம் | 1 00 | |
| „ C. அம்பிகை பாகன் | 1 00 | |
| „ P. நாகலிங்கம் | 25 | |
| „ C. ஆறுமுகதாஸ் | 25 | |
| „ K. வைரவநாதன் | 1 00 | |
| „ A. பொன்னுத்துரை | 1 00 | |
| „ S. இளையதம்பி | 1 00 | |
| „ A. சின்னத்தம்பி | 1 00 | |
| „ A. வேலுப்பிள்ளை | 25 | |
| „ T. ஆறுமுகம் | 2 50 | |
| „ M. V. நவரத்தினம் | 50 | |
| „ M. விஸ்வலிங்கம் | 25 | |
| „ T. சந்திரசேகரம் | 50 | |
| „ N. S. முருகேசு | 50 | |
| „ S. பொன்னுத்துரை | 50 | |
| „ R. கந்தையா | 25 | |
| „ K. சதாசிவம் | 25 | |
| „ S. கணபதிப்பிள்ளை | 1 00 | |
| ஸ்ரீமதி A. M. சிவக்கொழுந்து | 25 | |
| „ T. தன்னம்மா | 50 | |
| „ T. தங்கமணி | 50 | |
| „ T. ஞானபூரணம் | 1 00 | |
| „ S. அன்னப்பிள்ளை | 25 | |
| மாணவர் | 35 | |
| | | 18 90 |
| டக்டர் V. T. பசுபதி | | 10 00 |
| ஸ்ரீ C. முத்துக்குமாரு (மன்னார்) | | 5 00 |
| „ S. பேரம்பலம் (தொல்புரம்) | | 2 00 |
| „ M. S. வெக்கமல் கன்ஸம்தாஸ் | | 1 00 |
| „ வி. என். பரஞ்சோதி | | 1 00 |
| „ மீராலெப்பை | | 50 |
| „ M. நாகலிங்கம் | | 50 |

"சோதிட பரிபாலினி" ஆலயம்.

| | | |
|---|---|---|
| பிரமஸ்ரீ R. S. இரகுநாத ஐயர் | 5 00 | |
| „ S. T. மாணிக்கம் | 1 00 | |
| „ N. கந்தையா | 1 00 | |
| „ S. கணபதிப்பிள்ளை | 1 00 | |
| „ P. தில்லையம்பலம் | 1 00 | |
| „ S. வைத்தியலிங்கம் | 1 00 | |
| „ A. வேலுப்பிள்ளை | 50 | |
| | | 10 50 |
| ஸ்ரீ. V. S. R. நாதன் | | 5 00 |
| „ M. S. வெற்றிவேற்பிள்ளை | | 1 00 |
| „ M. குமாரசுவாமி | | 1 00 |
| „ V. கந்தையா | | 1 00 |
| பண்டிருப்பாய் சைவாங்கில கலாசாலை | | 12 00 |

ஆக ரூ. 514-75.

## சீனி இறக்குமதி.

சென்ற திங்கட்கிழமை கொழும்பிற்கு வந்த கப்பலிலிருந்து பெருந் தொகையான சீனி இறக்குமதியானது; சென்ற வாரம் சீனி வரவின்மையால் அதன் விலைமிகவும் ஏறியமை முன்னரே, இப்பத்திரிகையில் வெளிவந்தது; இனி, பழைய விலைக்கு விற்கப்படும்.

## பழைய பல்லவி பாடுகிறார்கள்!

### டொனமூர் அரசியலின் ஊழல்.

—:0:—

### இப்போதுதான் ஞானம் பிறந்ததா?

—(o)—

இலங்கையில் தற்போது நடைமுறையிலிருக்கும் டொனமூர் அரசியலைத் திருத்த வேண்டுமென அரசாங்கசபை மந்திரிமார் அனுப்பிய மனுவுக்கு ஆதரவு அளிப்பதற்காகச் சென்ற ஞாயிற்றுக் கிழமை கேகாலையில் ஓர் மகாநாடு கூடியது. அரசாங்கசபை அங்கத்தவர்களான மொலமூரே மனைவி, மிஸ்டர் டீ. எஸ். செனநாயகா, மிஸ்டர் ஈ. வ. பீ. விஜயரத்தின முதலியவர்களும் மிஸ்டர் பிரான்சிஸ் டீ. சொய்சா முதலிய பிரதிநிதிகளும் சமுகமாயிருந்தனர்.

"அரசாங்க சபைக்குப் பொறுப்பாளர்கள் மந்திரிமாரே; ஆனால் அவர்களுக்கு அதிகாரம் இல்லை; அதிகாரம் முழுவதும் மூன்று வெள்ளை உத்தியோகத்தர் வசம் இருக்கின்றன. ஆனால் அவர்களுக்கும் பொறுப்பில்லை. இப்படிப்பட்ட கர்த்தாக் கொண்ட அரசியலைப்போல துரதிர்ஷ்டம் பிறிதொன்றில்லை. இதனை மாற்றுவது அவசியம் என்று மொலமூரே மனைவி பேசினார்.

விவசாயப்பகுதி மந்திரியான மிஸ்டர் டீ. எஸ் செனநாயக்கா ஐரோப்பியர் அரசியல் திருத்தத்திற்கு மாறாக நிற்பதைக் கண்டித்தப் பின் வருமாறு பேசினார்:

ஐரோப்பியர் தங்கள் பிழைப்பின் பொருட்டு இந்த இலங்கைக்கு வந்தவர்கள். அவர்களுக்கு இங்கே அபிமானம் என்பது இல்லை தங்கள் பிழைப்பை மாத்திரம் பார்த்து ஏதும் பணம் சம்பாதித்தபின் அவர்கள் ஜென்ம தேசம் சென்றுவிடுவார்கள். ஏகாதிபத்திய வாஞ்சை பூண்ட பிரிட்டிஷார் பிரித்தாளுவதையே தமது பிரதான தந்திரமாகக் கொண்டுள்ளனர். கண்டிப்பகுதியில் உள்ளவர்களையும் வட இலங்கையரையும் அரசியற் சீர்திருத்தத்திற்கு மாறாகத் தூண்டிவிட்டிருக்கின்றனர்.

'இந்த நாட்டிற் பிறந்தவர்களுக்கு உணவுக்கு வழியில்லை; பிழைப்புக்கு வழியில்லை, வர்த்தகத்தில் 100க்கு 60 விகிதம் ஐரோப்பியர் வசமும் 30 விகிதம் இந்தியர் வசமும் இருக்கிறது. தற்போதைய அரசியலின் பயனாக இலங்கை வர்த்தகருக்குத் தேவையான வசதிகள் அளிக்கப்படவில்லை.

"டொனமூர் அரசியற்திட்டத்தைப் பரீட்சார்த்தமாக வேனும் நடாத்தவேண்டும் என்று சாதித்தவர்களில் யானும் ஒருவன். இந்த அரசியல் துர்நாமமானது. எனவே அதனை மாற்றுதற்கு இலங்கையராகிய நாம் எல்லோரும் ஒற்றுமை பூண்டு கருமம் ஆற்றவேண்டியது கடனாகும்."

இதன்பின் பிரதிநிதிகளில் ஒருவரான மிஸ்டர் பிரான்சிஸ் டீ சொய்சா பேசினார்: '2½ ஆண்டுகளுக்கு முன்னரேயே இந்த டொனமூர் அரசியற்திட்டம் உதவாது என்று நான் கூறினேன். எனது கூற்று இப்போது தான் உங்களுக்கு உண்மையெனப் புலப்பட்டது போலும்." என்று அவர் குறிப்பிட்டார்.

இதன்பின் கேகாலைப் பிரதிநிதியான மிஸ்டர் இ. வ. பீ. விஜயரத்தின என்பவர் பேசினார். அவர் பேசியதன் சாரமாவது:

"எமது கோரிக்கைகளை பிரிட்டிஷார் மறுத்தாலும் மறுப்பர். அவர்கள் மறுத்தால், நாம் செய்யவேண்டியது என்னவென்பதைப் பற்றியே நாம் இனிச் சிந்திக்க வேண்டும். அடுத்த முறை நாம் எமது பிரதிநிதிகளை அரசாங்க சபைக்கு அனுப்பாது அதனைப் பகிஷ்கரிக்க வேண்டும்.'

இந்தச் சிங்களப் பிரதிநிதிகளுக்கு இப்போது தான் ஞானம் பிறந்தது? அல்லது எப்போதும் போல பழைய பல்லவியைப் பாடிவிட்டு அடுத்ததேர்தலில் பொது ஜனங்களை ஏமாற்றுவதற்காகக் கைக்கொள்ளும் தந்திரமா இது?

## அறிவித்தல்.

கீழ்மாகாணத்தைச் சேர்ந்த, திரிகோணமலைப்பகுதி தம்பலகாமக் கட்டாவில், 1934ம் ஆண்டு பங்குனி மாதம் 1ந் திகதி தொடக்கம் 1937ம் ஆண்டு பங்குனி மாதம் 28ந் திகதிவரை முதலைக்குளிக்கும் குத்தகைக்கு, 1934ம் ஆண்டு மாசி மாதம் 23ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 12 மணிவரை கேள்விப்பத்திரம் அழைக்கப்படுகின்றது.

இக்குத்தகையை வாங்க உத்தேசிப்பவர்கள் மற்றும் விளம்பரங்களுக்கு 1934ம் ஆண்டு மாசிமாதம் 9ந் திகதி அரசாட்சி கெசற் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் கேள்விப்பத்திர நிபந்தனைகளைப் பார்க்கவேண்டும். அல்லது திரிகோணமலைக் கச்சேரிக்கு விண்ணப்பஞ் செய்யவேண்டும்.

எம். கே. ரி. சாண்டிஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு,
திரிகோணமலை.

திரிகோணமலைக்கச்சேரி,
1934ம்ஆண்டு மாசிமாதம் 3ந்திகதி.
(G. 41. 15&22-2 34.)

## சைவ பரிபாலன சபை.

### அதன் உற்பத்தியும் வளர்ச்சியும்.

(8—2—34-ன் தொடர்ச்சி.)

### சைவப் பிரசங்கம்.

இச்சபை தொடங்கிய முதல்வருஷத்தில் க. சுப்பையர் மாத்திரமே நியோகிக்கப்பட்ட பிரசங்கி. இரண்டாம் வருஷம் அ. குமாரசுவாமிப் புலவரும், மு. கனகசபாபதி ஐயரும் இச்சபையின் கௌரவப் பிரசாரகர்களாயிருந்து, பல பிரசங்கங்கள் செய்தார்கள். அதுகண்டு மா. முத்துக்குமாரசுவாமிக் குருக்கள், சு. ஏரம்பையர், க. இராமலிங்க வன்னியனார் முதலானவர்களும் பிரசங்கஞ் செய்து வந்தார்கள். கிறிஸ்து மத கண்டன சபையாரும் இதற்குத் துணைசெய்து வந்தார்கள். சுப்பையர் மாத்திரம் இரண்டாம் வருஷம் நூற்றிருபத்தைந்து பிரசங்கங்கள் செய்திருக்கிறார். குமாரசுவாமிப் புலவர் சிறிது காலத்துள் பதினறு பிரசங்கஞ் செய்தனர். முதல் வருஷம் போகப்பெறாத பருத்தித்துறை, புலோலி, வல்லிவெட்டித்துறை, உடுப்பிட்டி, அல்வாய், அச்சுவேலி, நாவற்குழி, சாவகச்சேரி, மறவன்புலவு, பளை, கொடிகாமம், உரும்பிராய், சிறிமலை, சங்குவேலி, சுழிபுரம், அணலைதீவு, மண்டைதீவு முதலிய இடங்களிலெல்லாம் இரண்டாம் வருஷம் பிரசங்கம் நடந்திருக்கின்றது. இவைகளெல்லாவற்றினும் விசேடமாக யாழ்ப்பாணக் கோட்டையிலே மறியற்காரருக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் பிரசங்கஞ் செய்யப்பட்டது. அங்கே சமயத்தோடு சன்மார்க்கமும் போதிக்கப்பட்டது. அப்போது அங்கிருந்த குற்றவாளிகள் பலர் தாம் செய்த குற்றத்தை நினைந்து பச்சாத்தாபப்பட்டுக் கண்ணீர்விட்டழுதார்களாம். திருவிழாக் கூட்டம் முதலான இடங்கள் தவிர மற்ற இடங்களில் சுப்பையருடைய பிரசங்கத்தைக் கேட்டவர் தொகை ஏறக்குறைய 18795. சில சமையங்களில் கிறிஸ்தவர் சைவத்திலே செய்த ஆக்ஷேபங்களுக்குத் தக்கவாறு சமாதானங்கள் சொல்லப்பட்டன. ஊரவர்களுக்கு இச்சபைப் பிரசங்கத்தில் பேராசை உண்டென்பது அவர்கள் இச்சபைப் பிரசங்கிகளை அழைத்தமாற்றானும் உபசரித்தமாற்றானும் அவர்கள்மேல் துதிப் பிரபந்தங்கள் செய்தலானும் விளங்கிற்று. இவ்விரண்டாம் வருஷம் இச்சபை அங்கத்தவரும் பிறரும் உபகரித்த பணம் 218 ரூபாவாகும். பிரசாரகர் வேதனம், சஞ்சேதா வேதனம் முதலியவற்றிற்காகச் செலவான தொகை 226 ரூபா 25 சதம் ஆகும்.

### வித்தியாசாலை.

நம்மவர்கள் கிறிஸ்து சமயத்திலே பிரவேசித்தற்கு முக்கிய காரணம் சிறு வயசிலே கிறிஸ்தவ வித்தியாசாலைகளிற் கற்கும் கல்வியேயாகும். ஆதலால் நம்பிள்ளைகளைப் பரசமயிகளினுடைய பள்ளிக்கூடங்களுக்கனுப்பாது சாவதானமாகப் பாதுகாத்துச் சைவப் பள்ளிக்கூடங்களுக்கே அனுப்பிக் கல்வி கற்பித்தல் வேண்டும் என்னும் போதனை இச்சபையாரால் பல ஊர்களிலும் போதிக்கப்பட்டது. அது கேட்டதனாலும் பிற மதத்தவர்களுடைய ஆக்கிரமங்களை நேரே அனுபவித்தறிந்தமையால் அவற்றைச் சகிக்கலாற்றாமையானும் காரைதீவு, வேலணை, புங்குடுதீவு, பூநகரி என்னும் இடங்களில் ஒன்பது வித்தியாசாலைகள் தாபிக்கப்பட்டன. மண்டைதீவிலும், ஆனைவியிலும் வித்தியாசாலைகள் தாபிக்க ஆயத்தம் செய்தார்கள். சாஸ்திர ஆராய்வோடு கூடிய உயர்தரமான இங்கிலிசுக் கல்வி கற்பவர்களுக்குப் பிற மதத்திலே வெறுப்பும், இந்து மதத்திலே விருப்பும் உண்டாயிற்று. இதனை உணர்ந்த இச்சபையார் ஆவசியகம் ஒரு "காலீஜ்" ஸ்தாபிக்க வேண்டுமென்று தீர்மானித்து அதற்கு வேண்டிய பிரயத்தனங்கள் செய்தார்கள். இது இப்படியிருக்க, முன் சொல்லிய சேரியிலே இரண்டாங் குறுக்குத் தெருவிலே வடசுத்தக்கு எடுத்த வீட்டிலே இருந்த சுசன்ம நகராக்கிர வித்தாலயம் (The Native Town High School) என்னும் பள்ளிக்கூடம் 1889ஆ புரட்டாதி௴ வண்ணார்பண்ணை வைத்தீயேஸ்வர சுவாமிகோயில் வடக்கு வீதியிலேயுள்ள மெத்தை வீட்டுக்குக் கொண்டு போகப்பட்டு அதிலே கல்வி கற்பிக்கப்பட்டு வந்தது. இப்படியிருக்க,

விகிர்திஷு ஆடி௴ ௰௯ (19—7—1890) கூடிய நிருவாகசபைக் கூட்டத்தில் "ஸ்ரீ அப்புக்காத்து நாகலிங்கபிள்ளையுடைய இங்கிலிசுப் பள்ளிக்கூடத்தை இச்சபையார் ஏற்றுத் தம்முடைய ஆதிபத்தியத்துக்குள்ளாக்கிக் கொள்ளுதல் வேண்டும்" என்று ஸ்ரீ சித. மு. பசுபதிச்செட்டியார் பிரேரித்து, இங்கிலிசுப் பள்ளிக்கூடம் தாபிக்கவேண்டுமென்று இச்சபையாருக்குள்ள கருத்தை விரித்துப் பேசினார். இந்த நிர்ணயம் ஸ்ரீ அ. தில்லையம்பலபிள்ளையால் அநுவதிக்கப்பட்டுச் சர்வாங்கீகாரமாயிற்று."

விகிர்திஷு ஆடி௴ ௩௰ (30-7-1890) கூடிய திருவாகசபைக் கூட்டத்தில "முந்திய கூட்டத்தில் பேசி முடிவு செய்த இங்கிலீஷ் பள்ளிக்கூடங் கட்டுவதற்கு ஸ்ரீ இ. மாரிமுத்துப்பிள்ளை வெளியாத்தில் வாங்கிய நிலத்தை யாதும் பிசகில்லாதிருந்தால்வாங்கவேண்டுமென்று ஸ்ரீ பசுபதிச்செட்டியார் பிரேரித்தபொழுது ஸ்ரீ வி. காசிப்பிள்ளை அவர்கள் பிசகு உண்டோ இல்லையோ என்று உறுதிகளை ஆராய்ந்த பின்னரே வாங்கவேண்டுமென்று சொல்ல, அவைகள் ஸ்ரீ கு. செல்வநாயகம்பிள்ளையால் அநுவதிக்கப்பட்டுச் சர்வசம்மதமாயின."

"பிசகில்லையென்று கண்டால் அந்த நிலத்தை வாங்கி அதில் தற்கால பாவிப்புக்கடுத்த ஒரு கட்டடத்தை (Temporary Building)க் கட்டி, படிப்பிக்கத் தொடங்க வேண்டுமென்றும்" செய்த தீர்மானங்களின் படி மாரிமுத்துப்பிள்ளையினுடைய வண்ணார்பண்ணை கிழக்கிறையிலுள்ள "தச்ச ளவும், மயிலன் வளவும்" என்னும் ஆறேகாலே அரைக்காற்பரப்பு நிலத்திலும, அதற்குக் கிழக்கு எல்லையிலுள்ள ஒன்றே காற்பரப்பு நிலத்திலும் பசுபதிச் செட்டியாராலே ஓர் விசாலமானசாலை (Temporary Building) அமைப்பிக்கப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில், இலங்கைச் சட்டநிரூபண சபையிலே தமிழ்ப் பிரதிநிதியாகவிருந்த பொ. இராமநாதர் 1890ஆ புரட்டாதி௴ றயில்வே கொமிஷனர்களி லொருவராக யாழ்ப்பாணம் வந்து, வடமாகாணத்துக்கு றயில்வே திறப்பதைக்குறித்து விசாரணைகள் செய்து, உடன்வந்தவர்களை அனுப்பிவிட்டுத் தாம் தமது சுய ஊராகிய யாழ்ப்பாணத்துப் பல ஊர்களையும், சுற்றமித்திரர்களையும் தரிசிக்குமாறு சில தினம் தங்கியபோது "ஸ்ரீ வைத்தீசுரன் கோயில் வசந்த மண்டபத்திலே விகிர்திஷு புரட்டாதி௴ ௧௭ (17—9—1890) புதன்கிழமையிரவு மகாசபை கூடப்பட்டபொழுது இச்சபையில் முன் சேர்ந்திருந்த ம. ா. ா. ஸ்ரீ தா. செல்லப்பாபிள்ளை அவர்களும், சேர்ந்திராத கொழும்பு ம. ா. ா. ஸ்ரீ பொ. இராமநாதர், வட்டுக்கோட்டை இரகுநாத முதலியார், (மணியகாரர்) யாழ்ப்பாணம் தம்பாபிள்ளை முதலியார், (மணியகாரர்) கோப்பாய் குமாரசூரிய முதலியார், அ. மயில்வாகனர் முதலாகப் பட்டணத்திலும் பிறவூர்களிலுமிருந்து ஏறக்குறைய 2000 பேர் வந்திருந்தார்கள்.

அப்பொழுது ம. ா. ா. ஸ்ரீ இராமநாதரவர்கள் இச்சபையின் நல்ல நோக்கத்தையும் சைவசமயத்தின் மகிமையையும் எடுத்துக் காட்டி, கிறிஸ்தவருடைய பரிசயம் ஒரு காலத்தும் நமக்கு ஆகாதென்றும் சைவப் பள்ளிக்கூடங்களுக்கே அனுப்பி நம்பிள்ளைகளுக்கு நல்ல கல்வியும், நல்ல பழக்கமும் பயிற்றல் வேண்டுமென்றும் நெடுநேரம் பிரசங்கித்தார்கள் இவ்விஷயங்களை அநுவதித்து அக்கிராசனாதிபதியாயிருந்த செல்லப்பாபிள்ளை அவர்களும் பேசினார்கள். பேசி முடிந்தவுடன்,

I. "சைவசமய பரிபாலன சபையாரால் நடத்தப்பட்டு வருகிற காரியங்களை இன்னும் மதிக விருத்திக்குக் கொண்டுவருதற்காக மேற்படி சபையாரால் செய்பட்ட விதானங்களுட் சிலவற்றைத் திருத்தல் வேண்டும்" என்று ஸ்ரீ வே. முதலியார் இலங்கை நாயக முதலியாரால் பிரேரிக்கப்பட்டது. அது ஸ்ரீ நாகலிங்கபிள்ளையால் அநுவதிக்கப்பட்டுச் சர்வசம்மதமாயிற்று.

II. "விரோதிஷு ஆடி௴ 7௳ வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையிற் கூடிய சபையில் விதிக்கப்பட்ட விதானங்களில் இச்சபையின் உத்தேசத்தை விளக்கும் விதானத்தை ஒழிந்த ஏனைய விதானங்களை நீக்கல் வேண்டும்" என்று அப்புக்காத்து ஸ்ரீ கனகசபைப்பிள்ளையாற் பிரேரிக்கப்பட்டது. அது ஸ்ரீ S. சின்னத்தம்பிப் பிள்ளையால் அநுவதிக்கப்பட்டுச் சர்வசம்மதமாயிற்று.

III. "இச்சபை இன்றுமுதல் சைவபரிபாலனசபை என்று அழைக்கப்படுதல் வேண்டும்" என்று ஸ்ரீ ச. பொன்னம்பலபிள்ளை பிரேரித்தனர். அது அப்புக்காத்து ஸ்ரீ நாகலிங்கபிள்ளையால் அநுவதிக்கப்பட்டுச் சர்வசம்மதமாயிற்று. —(தொடரும்)

## நீதிஸ்தலத்திற் காந்திக்குல்லா

—:*:—

### கௌரவத்தைப் பாதுகாப்பதிலும் நீதிசெலுத்துவதே மேல்.

—

### முந்திய நீதியரசரின் விளக்கம்.

வடஇலங்கைச் சகலாதச்சாயச் சங்கத்தலைவரான ஸ்ரீ எதிர்வீரசிங்கம் காந்திக்குல்லாவை அணிந்து நீதிஸ்தலத்திற்குச் சென்றமை நீதிபதி மிஸ்டர் சைமன் ஞெட்நிக்கோவிற்கு அருவருப்பைக் கொடுத்தது. நீதிஸ்தலத்தில் கௌரவத்தைப் பாதுகாக்க வேண்டிப் போலும் அவர் குறித்த குல்லாவை அகற்றுவித்தார். இற்றைக்குப் பலவருஷங்களின்முன்னர் சாவகச்சேரிப் பொலிஸ் நீதிஸ்தலத்தில் இப்படியான ஒரு சம்பவம் நடைபெற்றது. ஓர் வழக்கிற்குச் சாட்சிசொல்லவந்த பிராமணரொருவர் சால்வை யணிந்துவந்தார். பொலிஸ் நீதிபதி சால்வையை அகற்றும்படி சொல்ல அந்தணர் மறுத்துவிட்டார். நீதிஸ்தலத்தை அவமானப்படுத்தினரென்ற குற்றத்தின்பேரில், அந்தப் பிராமணர், அதே நீதிபதியால் 5ரூபா அபராதம் விதிக்கப்பட்டார். பிராமணர் நீதிபதியின் தீர்ப்புக்கு மாறாக உயர்தர நீதிமன்றத்திற்கு மறுச்செய்தார். மறுவை விசாரித்த நீதியரசர் மிஸ்டர் உவால்ற்றர் பெரீரா அவர்கள், பொலிஸ் நீதிபதியின் தீர்ப்பை நிராகரித்து, "கீழ் நீதிமன்றங்களில் உள்ள நீதிபதிகள் நீதிஸ்தலங்களின் கௌரவத்தைப் பாதுகாப்பதிற் சிரத்தை எடுப்பதிலும் மேலாக, நீதிசெலுத்துவதிற் சிரத்தை யெடுத்தால் நன்மையாகவிருக்கும்" எனும் கருத்துப்படக் கூறினர். நீதியரசர் மிஸ்டர் உவால்ற்றர் பெரீரா அவர்களின் யதார்த்த மொழிகளை தற்காலத்து நீதிபதிகள் அவதானிப்பாராக என்று ஓர் "அபிமானி" எழுதுகிறார்.

## 100 கோடி பவுணை விழுங்கும் யுத்தப்பகுதி.

சென்ற ஐரோப்பிய மகாயுத்தத்தில் பங்குபற்றி இப்போது பென்ஷன் எனப்படும் உபகாரவேதனம் பெறுவோர் தொகை இங்கிலாந்தில் மாத்திரம் 407,000 பேராம். யுத்தம் முடிந்து இற்றைவரை 1047000 000 தங்கப்பவுண் உபகார வேதனமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

—

## மாமியைக் கொன்றபின் தற்கொலை செய்தான்.

பலாங்கொடை-பண்டாரவளைத் தெருவிலுள்ள செலகமாஎன்னுங்கிராமத்திலுள்ள கிரிபண்டா என்பவன் தனது மாமியை (மனைவின் தாய்)க் கத்தியாற் குற்றிக் கொன்று, மனைவிக்கும் மைத்துனனுக்கும் அபாயகரமான காயங்கள் விளைத்தபின், ஓர் மலைக்குன்றின் மீதேறிக் கீழ் விழுந்து இறந்தானென்று இங்கு வந்த செய்தியொன்று கூறுகிறது.

—

## அரசாங்கசபைத்தெரிவு.

### அபேட்சகர்கள்.

பிரேரணைத் தினம் நியமிக்கப்படுமானால் ஊர்காவற்றுறைப் பகுதிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி உதவிப்பிரதமாசிரியர் மிஸ்டர் ஜே வி. செல்லையா எம்.ஏ அவர்களும், இராசவாசல் முதலியார் த. காராளபிள்ளை அவர்களும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிப் பழைய பிரதமாசிரியர் மிஸ்டர் நெவின்ஸ் செல்வத்துரை பி ஏ. அவர்களும், அபேட்சகராக முன்னிற்பரென்றும் நம்பத்தகுந்த இடத்திலிருந்து செய்தி கிடைக்கிறது. யாழ்ப்பாணப்பகுதிக்கு ஸ்ரீ அ. மகாதேவன் அவர்களும், ஸ்ரீ. சு. இராசரத்தினம் அவர்களும் அபேட்சகராக நிற்பரென்று தெரிகிற.

—

## நூதன மணிக்கூடு.

தெஸ்மெலச் சுதேசபாடசாலைத் தலைமையாசிரியரான மிஸ்டர் எச் யூ. பெரீரா என்பவர் ஓர் நூதனமான மணிக்கூட்டைச் செய்திருக்கிறார். அந்த மணிக்கூடு உலகத்தில பல்வேறு பாகங்களிலுள்ள நேரத்தை ஒரேசமையத்திற் காட்ட வல்லதாகும். இங்கிலாந்து, பம்பாய், காபுல், ஜெர்மனி, அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா முதலாம் இடங்களில் ஒரே சமையத்தில் என்ன நேரம் என்பதை அம்மணிக்கூட்டிலிருந்து பார்த்தறியலாம். அதில் 21 மணிக் கம்பிகளும் 21 நிமிஷக் கம்பிகளுமுண்டு. மிஸ்டர் பெரீரா, கொழும்பு வானசாஸ்திர நிபுணரின் உதவியுடன், அம்மணிக்கூட்டைபற்றி இன்னும் ஆராய்ச்சி செய்வாரென்று அறிகிறோம்.

## ஜப்பான் யுத்தத்திற்கு ஆயத்தமா?

### ருஷிய சேனாதிபதியின் புகார்.

—o—

ருஷியச் சேனாதிபதிகள், அரசியல் வாதிகள், ஜப்பானைக் குறை கூறுவது ஒழிந்தபாடில்லை. சென்றவாரம் முடிந்த வருடாந்தச் சமதர்ம மகாநாட்டில் தூரகிழ்த்தேசத்து ருஷியப் படையின் சேனாதிபதியான பிளேச்சர் என்பவர் ஜப்பான ருஷியாமீது படையெடுக்க ஆயத்தமாயிருக்கிறதென்று குற்றஞ் சாட்டினார். அவர் கூறியதாவது —

"சோவியத் ருஷியாமீது படையெடுக்க ஜப்பான் தனது படைகள் யாவற்றையும் திரட்டுகிறது. மஞ்சூரியாவின் வடபாகத்தை ஜப்பானியர் தமது படைகளுக்கு இராணுவப்பயிற்சி ஸ்தலமாக்கிவிட்டனர். வட மஞ்சூரியாவில இருந்து ருஷியாவுக்குத் தாவுதல் அவர்களுக்குச் சுலபமான காரியமாகும்.

"இன்னும் பகைவரைத் தாக்குதற்கான தெருக்களையும் அவர்கள் இப்போது மஞ்சூரியாவில் நிர்மாணித் திருக்கின்றார்கள். ஜப்பானின் முழு யுத்தப்படையிலும் மூன்றில் ஓர் பாகம இப்போது மஞ்சூரியாவில் ருஷியாமீது படையெடுக்க ஆயத்தமாயிருக்கிறது.

"ஆனால் ருஷியாகிய நாமும் சும்மாவிருக்கவில்லை. ஜப்பானியரின் படையெடுப்பைத் தடுப்பதற்கு நாமும் எம்மாலான முயற்சிகள் யாவற்றையும் செய்துதான் வருகிறோம். நாம் எமது சேனையை அதிகப்படுத்திப் பெலப்படுத்திக்கொண்டேம். எவர்வந்தாலும், தடுப்பதற்கேற்ற படைகளையும் யுத்தப் பீரங்கிகளையும் நாம் எமது எல்லைப் புறத்தில் நிறுவியிருக்கிறோம்".

### சீன—ஜப்பானிய சமாதானம்.

1933 ம் ஆ. தொடக்கமாக ஜப்பானின் அதிகாரத்தில் இருந்து வந்த ஷாங்கைக்குவான் என்னும் சினமாகாணத்தை ஜப்பானியர் சின அரசினரிடம் சென்ற சனிக்கிழமை திருப்பிக் கொடுத்தனர் இதனால் சின—ஜப்பானிய நட்பு வளர ஏதுவாகும் என்று அரசியல் வாதிகள் கருதுகின்றனர்.

## இந்திய விமானியின் மரணம்.

திருச்சினுப் பள்ளியில் வசித்த ஸ்ரீ ஆர் சேஷாயி என்னும் ஆகாய விமானி சென்ற ஞாயிற்றுக் கிழமை நகரைச் சுற்றித்தமது விமானத்தில் வரும்போது யந்திரம் பழுதுற்றதால், விமானம் கீழ் விழுந்து நொருங்கியது. ஸ்ரீ சேஷாயியும அதன்கீழ் அகப்பட்டு உடன் மரணமடைந்தார்.

—

## நிர்வாணமடையத் தன்னையே எரித்த புத்தகுரு.

பர்மாவிலுள்ள தேகன் என்னும் கிராமத்தில் வசித்த பௌத்த சந்நியாசி ஒருவர், தான் நிர்வாணநிலை (மோட்சம்) அடைவதற்காகத் தன்னை எரித்துத் தற்கொலை செய்த சம்பவம் எமக்கு எட்டுகிறது.

குறித்த குரு, சந்நியாசிக்குரிய துவராடையை அணிந்து அதன்மீது மண்ணெண்ணெயை ஊற்றினர். பின் ஓர் பௌத்த பாஞ்சாலைக்கு முன்னால் நின்று தனது ஆடைக்கு நெருப்பை மூட்டினர். சிறிதுநேரத்தில் அவர் சாம்பராயினர்.

—

## தேர்தலில் வகுப்புவாதம்.

### கலகம் செய்தவருக்குச் சிறை

பலாங்கொடை உபதேர்தலின்போது சட்டவிரோதமாகக்கூடிக் கலகம் செய்து, பலாங்கொடை மதுப்பரிசோதகர் ஸ்ரீ ஏ ஆர். சின்னப்பா அவர்களுக்கும், ஓவசியர் ஸ்ரீ செ. கனகசபை அவர்களுக்கும் சரீரதீங்கு விளைத்தனர் என ஒன்பது சிங்களவர் இரத்தினபுரி நீதிஸ்தலத்திற் குற்றஞ்சாட்டப்பட்டனர். விசாரணையின்பின் நீதிபதி மிஸ்டர் என். ஜே லடின்ரன் எதிரிகளைநோக்கி, 'நீங்கள் கூட்டம் கூடியது சட்டவிரோதமானதாகும். நீங்கள் இழைத்தகுற்றங்கள் மிகப்பாரதூரமானவை நீங்கள் அக்குற்றங்களை இழைத்திருக்கிறீர்கள் என்பதற்குப்போதிய ஆதாரங்கள் உண்டு" என்றுசொல்லி 5-ம், 6-ம், 7-ம், 8-ம், எதிரிகளை விடுதலையாக்கி, 1-ம், 2-ம், 3-ம், எதிரிகளுக்குத் தனித்தனி 6 மாதக் கடூழியச் சிறைத்தண்டனையும், 4-ம, 9-ம், எதிரிகளுக்குத் தனித்தனி 3 மாதக் கடூழியச் சிறைத்தண்டனையும் விதித்தார்.

பலாங்கொடை உபதேர்தலில் ஸ்ரீ ரீ. வேலுப்பிள்ளையும், மிஸ்டர் ரீ. ஜீ. ஜெயவர்த்தனு என்னும் சிங்களரும் அபேட்சராய் நின்றனர் அதில் ஜெயவர்த்தனுவே வென்றனர்.

## இந்தியச் செய்திகள்.

—:o:—

(1-ம் பக்கத் தொடர்ச்சி.)

### தீண்டாமையொழிப்புக்கு முஸ்லீம்கள் உதவி.

சமயக்கவுண்டன் பதி என்னுமிடத்திற்கு மகாத்மா சென்றபோது அங்குள்ள 30 முஸ்லீம் குடும்பங்கள் ஓர் தொகைப் பணத்தைத் தீண்டாமை ஒழிப்பின் பொருட்டு அடிகளிடம் கொடுத்தனர். தீண்டாமை என்னும் பிசாசு இந்தப் புண்ணிய நாட்டைவிட்டு அகல வேண்டி தாம பிரார்த்திப்பதாக அந்த முஸ்லீம்கள் அடிகளுக்குக் கூறினர். மகாத்மாவின் தீண்டாமை ஒழிப்புப் பிரசாரம் முஸ்லீம்களுக்கு மாறாகவே செய்யப்படுகிறதென்றும், தீண்டாதார் முஸ்லீம்களாகாதிருக்கும்படிக்கே மகாத்மா இப்பிரசாரத்தை நடத்தி வருகிறார் என்றும் ஓர் பிரபல முஸ்லீம் பத்திரிகை இற்றைக்குச் சில நாட்களுக்குமுன் கூக்குரலிட்டமை ஈண்டுக் குறிப்பிடத் தக்கது.

—

### மகாத்மாவின் பீகார் விஜயம்.

இந்த பிப்ரவரிமாதம் முடிய மகாத்மா காந்தியடிகள் பீகார் மாகாணஞ் சென்று கஷ்ட நிவாரணத் தொண்டு ஆற்றுவார் என்று ஓர் செய்தி கூறுகிறது.

—

### 10 லட்சம் ரூபா.

சென்ற ஞாயிற்றுக்கிழமைவரை, பாபு இராஜேந்திர பிரசாத் அவர்களின் சகாய நிதிக்கு 10 லட்சம் ரூபாவுக்குமேல் சேர்ந்து விட்டது என்று அறிகிறோம். அதில் பல்வேறு சகாய வேலைகளின் பொருட்டுச் சென்ற திங்கட்கிழமைவரையில் ஒரு லட்சத்து அறுபத்தொன்பதினாயிரம் ரூபா செலவிடப் பட்டிருக்கிறது.

—

### சநாதனிகளின் மறுப்பு.

கல்லிக்கோட்டையில் உள்ள சநாதனிகள் சிலர் மலபார அதிகாரியான மிஸ்டர் ரீ. பீ. நசல் அவர்களைக் கண்டு, தீண்டாதார் ஆலயப் பிரவேச மசோதாவைப் பற்றித் தமது கொள்கை என்ன என்பதை விளக்கினர். அவர்கள் அளித்த மநுவின் சாரம் வருமாறு:- குறித்த மசோதா எமது சமயத்தையும் சமயானுட்டானங்களையும் தாக்குவதாகும். தீண்டாதாரை முன்னேற்றம் செய்யும் முயற்சியில், நாம மற்றவர்களுக்குப் பின் வாங்குபவரல்ல. அவர்களுக்கு ஆலயப் பிரவேச உரிமை மறுப்பதால், அவர்களின் முன்னேற்றத்திற்கு மறுப்பவர்கள் என எம்மை விபரீதமாக விளங்கிக்கொள்ளலாகாது. தெருக்கள் ஆஸ்பத்திரிகள் போன்ற பொதுநிலையங்கள் அல்ல ஆலயங்கள்; ஹிந்து என்ற சொல்லும் எவனுக்கும் ஆலயப் பிரவேச உரிமை கிடையாது" அதிகாரி இவர்கள் அபிப்பிராயத்தை மத்திய அரசினருக்கு அறிவிப்பதாக வாக்களித்தார்.

—

### 1000 சாரதிகள் மறைந்து திரிகின்றனர்

இப்போது இலங்கையில் 1000 மோட்டர் ரதச் சாரதிகள் தண்டனைக்குத் தப்பிக் காந்துறைகின்றனராம்.

## யாழ்ப்பாணம் பெரியகடை பொருள் விலைகள்.

| | | | ரூ. ச. |
|---|---|---|---|
| 1. | ஊர் நெல்லு | புசல் | |
| 2. | சின்னரிக்கன் நெல் (மூடை) | | 4 75 |
| 3. | கறுப்பு | ,, ... | 5 25 |
| 4 | கருகு சின்ன | ,, ... | 5 25 |
| 5. | மூத்துச்சம்பா அரிசி | புசல் | 4 75 |
| | | ஷை நிறம் | 5 00 |
| 6. | கன்றுன்னடை | ,, ,, | 3 75 |
| 7. | றோன் | ,, ,, | 3 62 |
| 8. | மூழுப்பச்சை | ,, ,, | 3 00 |
| 9. | குறுநல் பச்சை | ,, ,, | 2 50 |
| 10. | குத்தரிசி | ,, | 3 50 |
| 11. | ஊர் அரிசி | ,, | — |
| 12. | மிளகாய் | இரு | 36 |
| 13. | மல்லி | ,, | 12 |
| 14. | மிளகு | ,, | 40 |
| 15. | சீரகம் | ,, | 35 |
| 16. | கடுகு | ,, | 28 |
| 17 | வெந்தயம் | ,, | 12 |
| 18. | உள்ளி | ,, | 24 |
| 19. | சோம்பு(பெருஞ்சீரகம்) | ,, | 20 |
| 20. | மஞ்சள் | ,, | 20 |
| 21. | கக்கு | ,, | 30 |
| 22. | உழுந்து | படி | 16 |
| 23. | பயறு | ,, | 16 |
| 24. | கடலை | ,, | 16 |
| 25. | பருப்பு (துவரை) | ,, | 24 |
| 26. | ,, (கடலை) | ,, | 18 |
| 27. | ,, (உழுந்து) | ,, | 20 |
| 28. | கோதுமை மா | இரு | 09 |
| 29. | ,, ரவை | ,, | 10 |
| 30. | வாதிடரிசி | 1 இரு (டின்) | 40 |
| 31. | சௌவரிசி | ,, | 14 |
| 32. | சர்க்கரை (வேலூர்) | ,, | 12 |
| 33. | ,, (ஜாவா) | ,, | 10 |
| 34. | சீனி (கிறேப்) | ,, | 12 |
| 35. | ,, (மா) | ,, | 13 |
| 36. | கற்கண்டு | ,, | 16 |
| 37. | கோப்பி 1-வது | ,, | 40 |
| | ,, 2-வது | ,, | 36 |
| 38. | தேயிலை 1-வது | ,, | 50 |
| | ,, 2-வது | ,, | 40 |
| 39. | கிறைக்காய் | ,, | 14 |
| 40. | கர்ப்பூரம் (வில்லை) | ,, | 1 60 |
| | ,, (பாக்கெற்) | ,, | 05 |
| 41. | நெருப்புப்பெட்டி | டசின் | 28 |
| | (3 நட்சத்திரம்) | ,, | 33 |
| 42. | நெய் (நகர) | இரு | 90 |
| 43. | தேங்காய் நெய் | படி | 20 |
| 44. | எண்ணெய் | ,, | 52 |
| 45. | கரோசின் தைலம் | | |
| | (மண்ணெண்ணெய்) போத்தல் | | 20 |
| | ,, | கலன் | 1 08 |
| 46. | தேங்காய் | 100 | 2 25 |
| 47. | வெங்காயம் | இரு | 05 |
| 48. | பம்பாய் வெங்காயம் | ,, | 08 |
| 49. | உருளைக் கிழங்கு | ,, | 10 |
| 50. | கருணைக் கிழங்கு | ,, | — |
| 51. | புளி | ,, | 8 |
| 52. | உப்பு | ,, | 4 |
| 53. | ,, | படி | 10 |
| 54. | விறகு | அந்கு | 1 20 |
| 55 | முழுப்பவுன் | | 21 50 |
| 56. | அரைப்பவுன் | | 11.00 |
| 57. | வெள்ளி | ரூபாஎடை | 50 |


இன்னும் ஒருவாரத்திற்கிடையில்
இங்கு வரவிருக்கும் "நொக்ரா" என்னும் கப்பலில்

**100000 குடைமார்க்கு ஓடுகள்**

வருகின்றன.

இப்போதே ஆர்டர்கள் கொடுத்தால்,
மலிந்த விலையிற் பெற்றுக்கொள்ளலாம்.
தற்போது உலவும் ஓடுகளில் இந்த ஓடுகளே சிறந்தன.
பிரதான அம்சங்கள்: தண்ணீர் கசியாது; தூசி அடிக்காது
தண்ணீரை உறுஞ்சாது; விசாலம் பெரிது;
100 சதுர அடி விஸ்தீரணத்திற்கு 118 ஓடுகள் போதுமானவை
விபரங்களை உடனே பின்வருவோரிடம் அறிக.

மெசர்ஸ் செருபிம் பிறதர்ஸ்,
தனி ஏசண்டர், பெரியதெரு, யாழ்ப்பாணம்.

Y. 12—7-5-34


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

Printed and Published by S. Adchalingam, residing at Ayanarkoviladv, Van: West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Thursday 15 th February 1934.